

# முத்திதழ்

MUTHTHITHAL

මුත්තිදල්

நீ. நான்.. நாம்...

சிற்றிதழ் : 09

மே – ஆகஸ்ட் 2022

முதுசத் தொகுப்பு

ISSN 2806-5123



## அனாமிகா

பண்பாட்டு மையத் திறப்புவிழா

## மூதூரில்

பட்டமளிப்பு விழா



## க.பொ.த (உயர் தரப்) பெறுபேறு

## தரமுயர்த்தப்படவேண்டிய

மூதூர் பிரதேச சபை

Rs. 150/=

இரு மாத சிற்றிதழ்

மாதாந்த இதழ்
# முத்திதழ்
முத்துப்படைப்புகளின் தொகுப்பு
Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk
SCAN ME
எம்மவர் ஆளுமைகளின் அடையாளம்
www.muththizhal.com +94 740818782 Mutur Muththizhal







**Resmin Chahine**
Talent Intl. School
Mutur.






**Ranees Haziqah Dhaneen**
Talent Intl. School
Mutur.




**Ubaithur Rahman**
Talent Intl. School
Mutur.




**Nowsath Aysha Manal**
Talent Intl. School
Mutur.

**Nazeem Reehath Zara**
Talent Intl. School
Mutur.

உங்கள் பிள்ளைகளின் சித்திரங்களையும்
பிரசுரிக்க விரும்பினால் கீழுள்ள
வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவையுங்கள்

**077 10 200 30**

முத்திதழ்
நீ, நான்.. நாம்...

இதழ்-09, மே/ ஆகஸ்ட் - 2022




Pages - 24
Size - A4
Location - Mutur
Category - Magazine
Layout By - Sanoos.tm
Adz Partner - MP News

**Mutur JMI Pvt.Ltd**

Contact - +94 740818782
Gmail - muththizhal.lk@gmail.com
Social Media - Muththizhal
Address - Bazar Mosque Road, Mutur.

**பிரதம ஆசிரியர்**
JUNAID MOHAMED IHSHAN

**பணிப்பாளர் சபை**
Abdul Cader Mohamed Asmy
Ajees Mohamed Rajees
Niyas Aasha Falin
Buhary Razeen Riza

**ஆலோசனைக் குழு**
*M.S. Amanullah (Retd. Principal)*
*Dr. A. Sathees Kumar (MBBS)*
*Ashseikh N.M. Nisath (Naleemi)*
*Mrs. Susana Munas (Teacher)*
*Mr. W. Mohamed Asmy*

மூதூரில் பட்டமளிப்பு விழா - 2022 12
உயர்தரப் பெறுபேறு மூதூர் வலயம் 24
நூல் வெளியீடு 05
மூதூர் பிரதேச சபை 16
சேவை நலன் பாரட்டு 23
முத்திதழ் செய்திகள் 18
எது சுதந்திரம் 09
விளையாட்டு 20
கர்ப்பகால உளவியல் 17

**Rs : 150/=**

## ஆசிரியர் மடல்

ஜே.எம். இஹ்ஸான்
பிரதம ஆசிரியர்

நாட்டின் பொருளாதார நிலை சற்று முன்னேற்றம் கண்டுள்ளபோதும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டண அதிகரிப்பு விலைவாசி என்பன சாமானியனின் வாழ்வியல் நிலையை ஆட்டம் காண வைத்துள்ளதுதான். இருந்தபோதும் கடந்த மாதங்களில் ஏற்பட்ட அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு சற்று நிவர்த்திக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியாகிய கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் மூதூர் வலயம் முதலாம் இடம்பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளது. இந்நிலையில் பல்வேறு குழுக்களினால் மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர் கௌரவிக்கப்பட்டு பாராட்டு நிகழ்வுகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது. இதேவேளை கிளிவெட்டி மகாவித்தியாலய மாணவி மாவட்டத்தில் கலைப்பிரிவில் முதல்நிலை பெற்று மூதூருக்கு பெருமை சேர்த்துள்ளார்.

சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின் திறப்புவிழாவை தொடர்ந்து பல்வேறு கலை, கலாசார மற்றும் பண்பாட்டு பாரம்பரிய இலக்கிய நிகழ்வுகள் அரங்கேற்றம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் மூதூர் மண்ணில் கிரிக்கட், உதைபந்தாட்டம் மற்றும் பெட்மிட்டன் விளையாட்டுகளில் இளைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கவனக்குறிப்பு செய்வதை அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாக போதைப்பழக்கம் தொடர்பிலான முறைப்பாடுகளை குற்றச்சாட்டுகளும் குறைவடைந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த முன்னேற்றத்தை மேலும் வலுவூட்டும் நடவடிக்கைகளை சமூகமாக முன்னின்று பங்களிக்க எத்தனிக்க வேண்டும்.

அத்துடன் மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாகாணம் தழுவிய சாதனைகளை நிலைநாட்டி மூதூர் மண்ணிற்கு பெருமை சேர்த்தது வருகின்றார்கள். இருந்தபோதும் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பிலான விழிப்புணர்வுகள் சமூகமயமாக்கப்பட வேண்டும். ஏனெனில் பின்தங்கி கிராமப்புறங்களில் நடைபெற்ற பல விழிப்புணர்வற்ற சிறுவர்கள் தொடர்பிலான வன்முறைகள் தற்போது நகர் புறத்திலும் பதிவாகி வருகின்றன. இதனை முற்தடுப்பு நடவடிக்கையை வீட்டுச் சூழல் தொடக்கம் பாடசாலை வரை மேற்கொள்வது கட்டாயக் கடமை ஆக்கப்பட்டுள்ளது.

காகித தட்டுப்பாட்டினால கடந்த மாதம் வெளிவரவேண்டிய முத்திதழ் சஞ்சிகை பிரதி இம்மாதம் இரண்டையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

- பிரதம ஆசிரியர்

# கிழக்கு மாகாணத்தில் முதலாவது உயிரியல் மருத்துவ பொறியியலாளரானார்

முகம்மது இப்ஹாம்




மூதூர் பெரியபாலத்தை வதிவிடமாகக் கொண்ட அல்-ஹாஜ் நஜிமுதீன் ஓய்வு நிலை நிருவாக கிராம உத்தியோகத்தர் (Admin GN) கஸீமா தம்பதிகளின் புதல்வரான **முகம்மது இப்ஹாம் 2022.04.06 ஆம் திகதி** பொதுச் சேவை ஆணைக்குழுவின் உயிரியல் மருத்துவ பொறியியலாளராக நியமனம் வழங்கப்பட்டு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அலுவலகத்தில் ஆளுனரின் தலைமையில் நடைபெற்ற நியமன வைபவத்தில் இவருக்காக நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

அதன் பின்னர் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஊடாக திருமலை மாவட்ட உயிரியல் மருத்துவ பொறியியலாளர் அலுவலகத்தில் பொறியியலாளராக தனது கடைமயினை பொறுப்பேற்றுள்ளார்.

இவர் க.பொ.த சாதாரண தரத்தினை மூதூர் மத்திய கல்லூரியிலும் உயர் தரத்தினை திருமலை ஸாஹிறா கல்லூரியிலும் கற்றார்.

- HND in Bio medical science at BMS (NVQ Level 6)
- Bio medical equipment technology at University college of health studies in Sri JayawardanaPura General Hospital Colombo.
- Bsc in Bio medical engineering at IIC technology University

போன்ற கற்கை நெறிகளையும் நிறைவு செய்துள்ளார்.

மேலும் Lanka hospital, Royal Hospital, Bio Medical Engineering Unit Trincomalee, Premium International (Pvt) LTD, Ceyoka Health Pvt LTD போன்ற நிறுவனங்களிலும் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**முகம்மது இப்ஹாம் அவர்கள் கிழக்கு மாகாணத்தில் முதலாவது உயிரியல் மருத்துவ பொறியியலாளராக நியமனம் பெற்றுள்ளமைக்காக முத்திதழ் சார்பாகவும், மூதூர் மக்கள் சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.**



# சர்வதேச நடுவராக

## மூதூர் சிஹான் சுஹூட் தெரிவு

மூதூரின் புகழினை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் சென்ற மண்ணின் மைந்தன், தேசிய நடுவர் சிஹான் சுஹூட் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை கிரிக்கட் வரலாற்றில் முதன் முதலாக **இங்கிலாந்து கவுன்டி கிரிக்கட்டின் (பிராந்திய) புகழ்பெற்ற பிராந்திய கிரிக்கட்டான மஞ்செஸ்டர் கிரிக்கட் லீக்கிற்கு 2022 பருவகால கிரிக்கட் தொடருக்கு இங்கிலாந்து கிரிக்கட் சபையின்** அங்கீகாரம் பெற்று நான்கு மாத ஒப்பந்த அடிப்படையில் நடுவர் பணியினை மேற்கொள்ள கடந்த 28.07.2022 ஆம் திகதி இங்கிலாந்தின் மஞ்செஸ்டக்கு சென்று இருந்தார்.

மறைந்த முன்னாள் அதிபரும், ஆங்கில ஆசிரியருமாகிய முஹம்மது இப்றாஹிம் யுபுனு சூஹத் மற்றும் மசாஹினா சூஹத் ஆகியோரின் மூன்றாவது மகனான சிஹான் சூஹத் அவர்கள் மூதூர் மத்திய கல்லூரி, திருமலை இந்துக் கல்லூரி மற்றும் மாவனல்லை ஸாஹிரா கல்லூரிகளின் பழைய மாணவராவார்.

2016 ம் ஆண்டில் சிறி லங்கா கிரிக்கட்டினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட நடுவர் போட்டிப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் சித்தி பெற்று மூதூரின் முதலாவது இலங்கை கிரிக்கட் நடுவராக எமதூர் பெயரினை நாடறியச் செய்தார்.

# மாவட்ட கடின பந்து அணிக்கு

## எஸ்.எம் உஸ்மான் தேர்வு



இலங்கை கிரிகட்டின் பாடசாலை மட்ட 19 வயதுக்கு கீழ்பட்ட திருகோணமலை மாவட்ட அணிக்கு மூதூர் சிங்கள மகா வித்தியாலய மாணவன் சூசம்ரின்முகம்மதுஉஸ்மான் என்பவர் முதற் தடவையாக மூதூரிலிருந்து தெரிவாகி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த இம் மாணவன் தன் அபார திறமையினாலும், அயராத விடா முயற்சி யினாலும் இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

தற்போது மூதூர் வெஸ்டர்ன் வாரியர்ஸ் அணியில் சகல துறை வீரராக நீண்ட காலமாக விளையாடி வரும் இவரிடம் காணப்பட்ட துடுப்பாட்ட மற்றும் பந்துவீச்சு முறையினை அவதானித்த வெஸ்டர்ன் வாரியர்ஸ் அணியின் தலைவரும், தேசிய நடுவரும், பாடசாலை அணிகளுக்கான பயிற்றுவிப்பாளருமான வை.எஸ்.எம். ஸிஹான் அவர்களினால் இனங் காணப்பட்டு சுழற்பந்து வீச்சாளராக நீண்ட காலமாக பயிற்றுவிக்கப்பட்டு வந்துள்ளார். அதனடிப்படையில் Right Arm Off Break பந்துவீச்சில் உஸ்மான் சிறந்து விளங்குகின்றார்.



கடந்த வருடம் நடைபெற்ற மாவட்ட மட்ட 19 வயதுக்கு கீழ்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான தொடரில் உஸ்மான் மூதூர் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை அணியில் விளையாடி பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தார். அதன் தொடராகவே அவருக்கு இவ் அரிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

# முத்திதழ் வாழ்த்து

# சர்வதேச புகைப்படப் போட்டியில் மூதூர் ஷர்பான் முதலிடம்





Familheey **நிறுவனத்தின் அனுசரணையில் 2022 ஆம் ஆண்டுக்கான** International Mobile Photo Contest **போட்டியில் உலகளாவிய ரீதியில் இருந்து 4958 புகைப்பட கலைஞர்களும், 2210 பதிவுகளும் பங்குகொண்டதில் இலங்கையை சேர்ந்த மூதூர் இளம் புகைப்பட கலைஞர் பாரீஸ் முஹம்மது ஷர்பான் அவர்கள் முதலிடம் பெற்று 2000.00 அமெரிக்க டொலர் (600,000.00**LKR**) பணப்பரிசை வெற்றிகொண்டு மூதூர் மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளார்.**

**எப்.எம்.ஷர்பான் அவர்கள் கடந்த 8 ஆண்டுகள் மேலாக புகைப்படத் துறையில் தனது பயணத்தை தொடர்ந்துவரும் இளம் படைப்பாளியாவர். 26 வயதான எப்.எம்.ஷர்பான் அவர்கள்** Deen Studio **நிறுவன உரிமையாளர் காதர் பாரிஸ் அவர்களின் புதல்வர் ஆவார். மற்றும் மூதூர் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் இதற்குமுன்னர் இலங்கையில் நடாத்தப்பட்ட புகைப்பட போட்டிகளில் பலவற்றில் பங்குகொண்டு பரிசில்களும் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயமாகும்.**

நேர்கண்டவர் : இஹ்ஸான் ஜே.எம்.ஐ

# நேர்காணல்

## உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்

நான் ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியை . ஆரம்பக் கல்வியை மூதூர் அல்ஹிதாயா ம.வித்தியாலயத்திலும், பின்னர் திரு கோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை புனித மரியாள் கல்லூரி , மூதூர் மத்திய கல்லூரி என்பவற்றிலும் எனது கல்வியைத் தொடர்ந்தே ன். எனது பத்த தொன்பதாவது வயதில் எனக்கு ஆசிரிய நியமனம் கிடை த்தது. எனது தனிப் பட்ட விருப்பின் பேரில், பதின்மூன்று வருட ஆசிரிய சேவையைப் பூர்த்திசெய்து எனது முப்பத்து இரண்டாவது வயதில் ஓய்வுபெற்றேன்.

குடும்பத்தைப் பொறுத்தவரை அருமையான அன்னை. தந்தை. என்னைப் புரிந்து கொண்ட அன்பான கணவர், ஆணும் பெண்ணுமாய் இரண்டு குழந்தைகள். நல்ல மருமகள், மனதுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் இரண்டு பே ரக்குழந்தைகள். மொத்தத்தில் மகிழ்ச்சியான வாழ்வு. அல்ஹம்துலில்லாஹ்.

ஒருவருக்கு அமையப்பெறும் சூழல் தான் அவரது ஆளுமையைத் தீர்மானிக்கிறது. அந்த வகையில் எனக்கமை ந்த சூழல் என் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்தது எனலாம். எனது பெற்றோரின் வளர்ப்பும், எனக்களிக்கப்பட்ட கல்விச் சூழலும் மிகப் பெரிய தாக்கத்தை எனக்குள் ஏற்படுத்தி இருந்தது. சுதந்திரமாய் வளர்க்கப்பட்டவள் நான். என்னைப் பொறுத்தவரை ஒவ்வொரு பெண்ணுக்கும் கல்வி மிக மிக அவசியம் என நினைக்கிறேன்.

தன் சுயம் தொலைக்காமல் வாழ்வில் முன்னேறும் உத்வேகத்தை அது அளிக்கிறது. அந்தக் கல்வியை எனக்களித்த இறைவனுக்கும் எனது பெற்றோருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது பெற்றோரின் அறிவுரையும் வழிகாட்டலும்தான் இன்னும் என்னை வழிநடாத்திச் செல்கிறது. அது மட்டுமில்லாமல் எனது திருமணத்தின் பின் எனது கணவரின் முழு ஒத்துழைப்பும், புரிந்துணர்வும் எனக்கு வலுசேர்த்தன.

## உங்களது இலக்கியப் பயணம்...??

எனது இலக்கியப்பயணம் பற்றி பேசுவதென்றால் அதற்கான ஆர்வம் பற்றி முதலில் பேசியாக வேண்டும். நான் ஏழாம் ஆண்டில் கல்வி கற்கும் போதி ருந்தே வாசிக்க ஆரம்பித்துவிட்டேன். எனது தாய் மூதூர் பொதுநூலகத்தின் மூன்றாவது உறுப்பினர் என நினை க்கிறேன். அவருக்காக எனது மாமா புத்தகம் எடுத்து வந்து தருவார். அப்போதிருந்தே ஏதாவது வாசித்துக்க கொண்டிருப்பேன்.

சற்று வளர வளர வாசிப்பின் மேல் கொண்ட காதல் வளர்ந்துகொண்டே போனது. சாண்டில்யன், கல்கி, வாஸந்தி, லஷ்மி, ஜெயகாந்தன் , சுஜாதா , சிவசங்கரி ஆகியோரின் பெரும்பாலான புத்தகங்களை வாசித்திருக்கிறேன். அது மட்டுமில்லாமல் வைரமுத்து,மு.மேத்தா ஆகியோரின் நூல்களும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். கூடவே ரமணிச்சந்திரன் போன் றோரின் நாவல்களையும் வாசிப்பே ன். அதன் பலனாகத்தான் எழுதுவதில் ஆர்வம் தோன்றியது.

எண்பதுகளின் ஆரம்பத்தில் வானொலிதான் என் எழுத்துகளுக்கு களம் அமைத்துத் தந்தது. ஒலி மஞ்சரி, பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி போன்ற நிகழ்ச்சிகளில் நான் சிறுகதைகள். கவி தைகள், கட்டுரைகள் என அதிகம் எழுதி இருக்கிறேன். மேலும் தினகரன், தினபதி, சிந்தாமணி, மித்திரன், போன்ற பத்திரிகைகளிலும், நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் அப்போது வெளிவந்த சிற்றேடுகளிலும் என் ஆக்கங்கள் பல வெளிவந்திருந்தன.

துரதிர்ஷ்டவசமாக போர்ச்சூழலின் போது இடம்பெயர்ந்ததில் அதில் எதுவுமே இப்போது என் கை வசம் இல்லை என்பது வருத்தத்துக்குரியது. அதன்பின்னர் சில காலங்கள் குடும்பம், குழந்தைகள் என என் எழுத்துப் பயணம் தடைப்பட்டிருந்தது. மீண்டும் 2009க்குப் பின்னர் நான் எழுதிய சிறுகதைகள் மித்திரன், நவமணி, விடிவெள்ளி போன்ற பத்திரிகை களில் வெளிவந்தன.

## பெண் என்ற அடிப்படையில் நீங்கள் எதிர்நோக்கிய சவால்கள்

உண்மையில் இலக்கியப் பயணத்தைப் பொறுத்தவரையில் பெண் இலக்கியவாதிகள் எதிர்நோக்கும் பாரிய சவால் குடும்பச் சுமைகள்தான். குடும்பம், குழந்தை “சமூகம் என்கிற வட்டத்தைத் தாண்டி, அதனைச் சமாளித்து முன்னேறுபவர்களால் மட்டுமே ஜெயிக்க முடிகிறது. எத்தனையோ பேர் திறமை இருந்தும் குடத்தில் போட்ட விளக்காக உள்ளே அமுங்கிப் போய்விடுகிறார்கள்.

நானும் அதே சவால்களை எதிர்கொண் போதிலும் எனது தந்தை, என் கணவர் ஆகியோரின் ஊக்குவிப்பினால் தொடர்ந்து எழுத ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் தந்தையும், அதன்பின் என் கணவரும் என் எழுத்துப் பயணத்துக்கு உந்துசக்தியாய் அமை ந்தார்கள் என்பதை பெருமையுடன் இங்கே சொல்லிக் கொள்கின்றேன். அது மட்டுமில்லாமல் ஆண்களைப்போல இலக்கிய சந்திப்புகள், நிகழ்ச்சிகளில் எங்களால் பங்குபற்ற முடியாமற்போய் விடுகிறது.

அதனாலும் நாங்கள் அறியப்படாமல் போய்விடுகிறோம். இதுவும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்தான்.

## உங்களது இலக்கியப் படைப்புகள் பற்றிய பார்வை??

நான் இதுவரை எந்த நூல்களையும் வெளியிடவில்லை. அதற்கான முயற்சி களில் இப்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கின் றேன். 2009க்குப் பின்னரான காலப் பகுதியில் பத்திரிகைகளில் வெளிவந்த எனது



பத்து சிறுகதைகளை உள்ளடக்க “ஒற்றைப்பனை” எனும் சிறுகதைத்தொகுப்பை உருவாக்கியிருக்கிறேன் விரைவில் அதனை அச்சில் நூலாகக் கொண்டு வர இருக்கிறேன். இன்ஷா அல்லாஹ்.

என் சிறுகதைகள் சாதாரண குடும்பச் சூழலில் இடம்பெறும் உணர்வுக் குவியல்களை படம் பிடித்துக் காட்டுபவையாகவே இருந்திருக்கிறது. இப்பது பிரதிலிபி என்னும் இணையத் தளத்தில் எனது தொடர்கதைகள் வெளிவருகின்றன. இவை காதலை மையப்படுத்தி எழுதப்பட்டவை.

இதுவரை நான்கு தொடர்நவனீங்களை பதிவேற்றம் செய்திருக்கிறேன். இது இருபத்துமூவாயிரம் பார்வைகளைத் தாண்டி இருக்கிறது என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. இவற்றை பிரதியை பதிவிறக்கம் செய்து பார்வையிட முடியும்.

## இளம் இலக்கியப் பயணிகளுக்கு நீங்கள் கூறும் அறிவுரை :


அறிவுரை கூறும் அளவுக்கு இன்றைய இளம் சமூகம் இல்லை என்பது என் எண்ணம். அவர்கள் மிகவும் வளர்ந்திருக்கிறார்கள். அவர்களது சிந்தனை , அவர்களது ஆற்றல் வியக்கவை க்கிறது. கூடவே மகிழ்ச்சியையும் தருகிறது. என்றாலும் ஒன்றே ஒன்று சொல்லத் தோன்றுகின்றது. வாசிப்பு மனிதனை பூரணப்படுத்தும் ஒன்று. எனவே நிறைய வாசியுங்கள்.

வாசிப்புக்கு ஒதுக்கும் நேரத்தை அதிகரியுங்கள். அது உங்களை நேரான பாதைக்கு நாமறியாமலே இழுத்துச் செல்லும். உங்கள் சுயம் தொலைக்காமல் வாழும் கலையை அது உங்களுக்கு பயிற்றுவிக்கும். கடைசியாக எனக்கு இந்த வாய்ப்பைத் தந்த முத்திதழுக்கு என் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த முத்திதழ் தொடர்ச்சியாக வெளிவர எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும். அதற்கு இறைவனின் உதவியை வேண்டி முடிக்கிறேன்.

# பெட்ரோல் செட் பக்கம்

சிறுகதை



சர்ஜூன் தெளபீக்

கரண்ட் போன நேரந்தான் உள்ள பு'ந்திக்கானுகள் நாய்கள் ... என்று சொல்லிக் கொண்டே என் பக்கம் திரும்பி பாருங்க செய்ற நாய் வேலய பூஎன்றார். கண்கள் நிறையக் கோபம்.. மனசு நிறைய விரக்தி இரண்டும் சேர்ந்து வசைகளாக அவரின் நாக்கில் உதிர்ந்துகொண்டிருந்தன. இன்னும் நான்கு ஐந்து பேர் தான் அதன் பின் இந்த பெட்ரோலுக்கான தொடர் வரிசைக் காத்திருப்பு முடிகின்றது என்று நினைத்துக் கொண்டிருந்தவருக்கு இடையில் புகுந்த சிலர் தந்த ஏமாற்றம் அவரை ஆட்டிப்போட்டுவிட்டது.

அதிகம் வயதானவர் என்று அவரைச் சொல்லிவிடமுடியாது. இருப்பினும் சுருக்கங்கள் முகத்தில் கோடுகள் வரையவும் கண்கள் இளமஞ்சள் நிறத்தை சிறுகச் சிறுக சேர்க்கவும் ஆரம்பித்திருந்தன. வயல்வெளியில் உழுது... நட்டு...வரப்பு வெட்டி... பாத்தி கட்டி என அனைத்தின் போதும் சூரியன் அவரைப் பதம் பார்த்திருக்க வேண்டும் என்பது போன்றதொரு தோற்றம். உடுங்க மாமா இவ்வளவு நேரம் நிண்டாச்சி...என்று சொல்லி அவரை ஆசுவாசப்படுத்த முயற்சித்தேன். பற்கள் தெரியச் சிரித்துவிட்டு அது தானா? என்று சொல்லி நின்ற இடத்திலேயே உட்கார்ந்த்து விட்டார். காத்திருத்தல் தரும் அழுத்தம் மிகப்பெரியது. அதிலும் நம்மைச் சூழ நடக்கும் அத்தனை அத்துமீறல்களையும் பொருட்படுத்தாது இந்த வரிசைகளில் நிற்பது என்பது ஒரு சோதனைதான்.

நிதானம் இழக்கச் செய்யும் இந்த இரைச்சலுக்குள் சங்கமமாகத் தவிப்பது போல அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கேட்ட தூசன வார்த்தைகளுக்கு இடையே பக்க ஸ்டான்ட் போட்டு நிறபாட்டப்பட்டிருந்த அவரின் பைக்கை அப்போது தான் கண்டேன். அது ஒரு பேர்டி 2002 மொடல் பெட்ரோல் பைக். அத்தனை அழகானதொரு மாஸ்டர் பீஸ் அது. சுருள் சுருளாக அந்த வாகனம் பற்றிய நினைவுகள் மனதின் அடியிலிருந்து ஒவ்வொன்றாக வெளிப்பட்டு மேலெழுந்தன. வீட்டுக்கு கொண்டு வந்து ஹோலில் மிடில் ஸ்டான்ட் போட்டு வைக்கப்பட்டிருந்த வண்டியை என் தம்பி வாயைப் பிழந்து சூப்பர்டா நானாயூபூ என்று சொன்ன நாள் முதல் பேர்டி 2002 மொடல் பெட்ரோல் பைக் எமது இருப்பின் அடையாளம் போல் ஆனது. அது ஏற்றி இறக்காத உறவினர் இல்லை. சென்று வராத இடம் மூதூரில் இல்லை.

அப்போது வரிசை வேகமாக நகர ஆரம்பித்திருந்தது. விரல் விட்டு எண்ணிவிடுமளவு வாகனங்களே முன்னால் நின்றன. எனது சந்தர்ப்பம் எப்போதும் வரலாம். தாமதித்தால் அருகில் இருக்கும் இராணுவ வீரன் எட்டி உதைத்துவிடுவான் என்ற பயம் வேறு. நல்ல பைக் என இது?பூ என்று பேச்சைத் தொடர்ந்தேன். இல்லாம இருவது வருசத்துக்கு மேல ஓடாத் தேஞ்சி ஒழச்சிக்கி. இரவு பகலா என்னோட சேர்ந்து வெயில் மழ பாக்காம ஓடிக்கி... என்று சொல்லி பழக்கப்பட்ட பிராணியொன்றை தடவிக்கொடுப்பது போல அதன் இருக்கையை தடவி விட்டு பெருமூச்சு விட்டார். அந்த வார்த்தைகளை அவர் சொல்லி முடிவதற்குள் அவர் மீது எனக்கு பரிதாபம் வருவதை என்னால் தவிர்க்கமுடியவில்லை. இப்ப கூட இந்த வண்டியால தான் எங்கட பொழப்பு ஓடுது மகன... என்று சொல்லி இரண்டு எட்டுக்கள் முன்னோக்கி நகர்ந்த்தார்.

அப்போது வாப்பா எமது பேர்டி 2002 மொடல் பெட்ரோல் பைக்கை ஒரு நாள் உருட்டிக் கொண்டு வந்தது கண் முன்னே காட்சியளித்தது.

என்ன வாப்பா?

ஸ்டார்ட் வருதில்ல. சவுக்கால சந்தில இருந்து உருட்டிட்டு வாரன்... என்றார்.

தாங்க நா கொண்டு போய் கெரேஜ்ல காட்டிட்டு வாரன்... என்று சொல்லி வண்டியை தள்ளிக்கொண்டு சென்று மெகானிக்கிடம் காட்டினேன்.

தம்பி பெட்ரோல் அடக்கிது. கார்பரேடர் மாத்தனும். என்ன செய்வம்?பூ என்றார்.

மாத்துங்க நானா. வாப்பா வந்து பைக்க எடுப்பாக.பூ என்றேன்.

இந்த உரையாடல் இத்தோடு முற்றுப்பெறவுமில்லை. மாற்றுதல்கள் தீர்ந்து போகவுமில்லை. இதையக் குழாயில் ஏற்பட்ட அடைப்பு போலத்தான் ஏதோ ஓர் இடத்தில் எமது பேர்டி 2002 மொடல் பெட்ரோல் பைக்கிற்கு. புதிய உறுப்புக்களை முற்றாகவே ஏற்க மறுத்துவிட்டவன் போல் அடம்பிடித்து நகர மறுத்தான்.

நான் அப்போது பெட்ரோல் பம்பிற்கு மிக நெருக்கமாக வந்துவிட்டிருந்தோம். கலன்களுக்குள் நிறைப்பதும், மீட்டரை மறைத்துக் கொண்டு அதிக ரூபாக்களுக்கு டாங்கிகளை நிரப்புவதும், இரண்டு முறை மீட்டரை அழுத்துவதும் என இரண்டு மூன்று வெற்றிலை சப்பிய வாய்கள் மாயா ஜாலங்கள் புரிந்து கொண்டிருக் கையில் மீண்டும் எனது வீட்டு ஹோலில் நடு ஸ்டான்ட் போடப்பட்டு ஒரு புதிய வண்டி நின்று கொண்டிருந்தது. யார் கொடுத்த ஆலோசனையோ தொரியவில்லை வாப்பா அப்படியொரு அபத்தமான முடிவை எடுத்திருந்தார். டேய் இதுவும் பேர்டி 2002 மொடல் பெட்ரோல் பைக் மாதிரித்தான். அதுக்கு மூனு கியர். இதுக்கு நாளு. இது சுபர் கப் பைக்... என்றார். அவரின் வார்த்தைகள் எம்மை ஆசுவாசப்படுத்த வில்லை. காலப்போக்கில் ஹோலில் டிஸ்கவர் 125 பல்ஸர் 150 என பல வாகனங்கள் நடு ஸ்டான்ட் போட்டு நின்றாலும் எனக்கு எப்போதும் அந்த பேர்டி 2002 மொடல் பெட்ரோல் பைக் போன்று தான் இருந்நது.

என்ன மகன் கடும் யோசனையாக் கொடக்கு... என்று சொல்லி என்னை பெட்ரோல் செட்டிற்கு மீண்டும் அழைத்து வந்தார். ...இல்ல மாமா... மகன கிலாசுக்கு கூட்டிப் போவனும். ஆனா லேட்டாகிட்டு... என்றேன். இனியும் எத்தன வருசத்துக்கு இது தொடருமோ தெரியாது. புள்ளகள் தான் பாவம்பூ என்று அவர் சொல்லி முடிப்பதற்குள் வண்டியை தள்ளிக்கொண்டு முன்னால் சென்று பணத்தை செலுத்தி டாங்கியை நிறைத்துக்கொண்டு வலது பக்கம் திரும்பி மக்கள் வெள்ளத்தில் என்னை தனிமையில் விட்டு மறைந்து போனது அவரின் பேர்டி 2002 மொடல் பெட்ரோல் பைக்.

இஸ்ஸரஹட கண்ட... இக்மனின் கண்ட... என்று ஒரு எச்சரிக்கை. தட்டுத்தடுமாறி உரிய இடத்திற்கு அந்த இராணுவ வீரனின் முறைத்தல்... நர நரவென்று கேட்ட பற்கடிப்பு மற்றும் ஆயிரக் கணக்கான எரிச்சல் நிறைந்த பார்வைகள் அனைத்தையும் முதுகில் சுமந்து உரிய இடத்திற்கு பைக்கை கொண்டு வந்து நிறுத்தி... பணம் செலுத்தி... டாங்கியை திறந்து கொடுத்து மீண்டும் இரண்டு கடும் பேச்சுக்கள் கேட்டு கால்களால் உந்தி பைக்கை இரண்டு எட்டுக்கள் முன் கொண்டு வந்து டாங்கியை மூடி பைக்கை ஸ்டார்ட் செய்து நாட்களாகத் தொடர்ந்த போராட்டத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து விடுதலை பெற்று வீடு நோக்கிச் சென்றேன்.

இன்னும் சில நிமிடங்களில் வீட்டை அடைந்திருப்பேன். அதற்கிடையில் ஒரு குறுக்குத் தெரு ஒன்றில் மீண்டும் என் முன் இரண்டு நாட்களாக நின்று கொண்டிருந்த அவரின் பேர்டி 2002 மொடல் பெட்ரோல் பைக் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதனைக் கண்டேன்.

என்ன மாமா பைக் நின்டுட்டா...? என்று சொல்ல ஆரம்பித்து முடிப்பதற்குள் அடுத்த பக்கத்தில் அவர் முழங்காலில் இருப்பதனையும் வாயில் ஒரு குழாய் ஒன்றை வைத்து உறிவதனையும் கண்டேன்.

குழாயின் மறுமுனை திறந்து விடப்பட்டிருந்த பைக் டாங்கின் உள்ளே இருந்தது. சற்று தள்ளி நின்று உறிஞ்சி இழுத்தல் பிளாஸ்டிக் போத்தல் களை நிறைத்தல் மற்றும் மீண்டும் உரிய இடத்தில் குழாயை வைத்தல் என்று சங்கிலியாகத் தொடர்ந்த அவரின் அத்தனை அனுஷ்டானங்களையும் வைத்தகண் வாங்காமல் பார்த்திருந்தேன். நிறைந்த மூன்று பிளாஸ்டிக் போத்தல்களையும் அருகில் காத்திருந்த இளைஞனிடம் கொடுத்து அவன் கொடுத்த ஐந்து ஆயிரம் ரூபா தாள்களையும் சுருட்டி இடுப்பில் செருகிக்கொண்டு பேர்டி 2002 மொடல் பெட்ரோல் பைக்கை எடுத்துக்கொண்டு மீண்டும் பெட்ரோல் செட் பக்கம் நோக்கி இருட்டில் கரைந்து போனார்.

# நூல் வெளியீடு



மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாலத்தடிச்சேனையை வசிப்பிடமாகக் கொண்ட "தமிழ்மாமணி" "கலைமாறன்" **செ.லோகராஜாவின்** '**இதய தாகமே இலக்கியம்**' என்ற நூல் வெளியீடு கடந்த 2022.09.07 ஆந் திகதி புதன்கிழமை பிற்பகல் 02.30 மணிக்கு கிளிவெட்டி மகாவித்தியாலய அமரர் அ. தங்கத்துரை மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர். பாலசுகுமார் நிறுவனர் சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக ஜனாப்.எம்.எம்.ஏ. அருஸ் தவிசாளர் பிரதேசசபை மூதூர் திரு.க. அன்பழகன் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் பிரதேச செயலகம் மூதூர் அவர்களும் மூதூர் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் வலய உத்தியோகத்தர்கள் பாடசாலைகளின் அதிபர்களும் கலந்து சிறப்பித்தனர்.







## எழுத்தாளர் கௌரவிப்பும் சாகரம் மலர் வெளியீடும்

மூதூர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்பட்ட முன்மாதிரியான செயற்பாடாக" எழுத்தாளர் கௌரவிப்பும் சாகரம் மலர் வெளியீடும்" என்ற நிகழ்வை வகையீடு செய்யமுடியும்.

சாகரம் நூல் : மூதூர் பிரதேசத்தை சார்ந்து கலை, இலக்கியம் சார்ந்து இலக்கிய நூல்களையும் வெளியீடு செய்த 37 எழுத்தாளர்களை பற்றிய சிறு குறிப்பு நூலாக சாகரம் இதழ் அமைந்துள்ளது. இதில் மூத்த எழுத்தாளர்கள் 22 நபர்களையும், 15 இளம் எழுத்தாளர்களை உற்பொதிகை செய்துள்ளது. Vi+37 பக்கங்களை கொண்ட இம்மலரை பிரதேச சபையின் நூலக உதவியாளர் எம்.முஹம்மட் இர்பான் வடிவமைப்பு செய்துள்ளார். 2021 டிசம்பர் அச்சு செய்யப் பட்ட இந்நூல் மூதூர் பிரதேச சபை 2022 ஆம் ஆண்டு கலாசார கௌரவிப்பு நிகழ்வில் வெளியீடு செய்யப்பட்டது.

அவ்வகையில் சம்பூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் தலைமையை கௌரவ தவிசாளர் எம்.ஏ.அருஸ் அவர்கள் பொறுப்பேற்று முன்னெடுப்பு செய்தார். பிரதம அதிதியாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. என்.மணிவண்ணன் அவர்களோடு விசேட விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் செ.யோகராஜா அவர்களோடு கௌரவ விருந்தினராக திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.எஸ்.எல். தென்னக் கோன், பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக், மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி முனவ்வறா நளீம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





## சிலை திறப்பு விழாவும், நூல் வெளியீடும்

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அருணாசலம் தங்கத்துரை அவர்களது 25வது ஆண்டு நினைவை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலை திறப்புவிழாவும், நினைவு மலர் வெளியீடும் கடந்த (28) மூதூர் - கிளிவெட்டி பகுதியில் உள்ள கிளிவெட்டி ம.வித்தியாலய தங்கத்துரை மண்டபத்தில் இடம்பெற்றது.



இதன்போது "இறைவாப் புகழுடையோன்" எனும் நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது. அத்தோடு அமரர் தங்கத்துரையின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி அஞ்சலியும் செலுத்தப் பட்டது.




மூதூர் - கிளிவெட்டி எனும் கிராமத்தில் இருந்து 34 வயது இளைஞனாக இலங்கை பாராளுமன்றத்திற்கு தெரிவான அமரர் தங்கத்துரை 1970ம் ஆண்டு தொடக்கம் 1997ம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் தேர்தலில் போட்டியிட்ட இரண்டு தடவைகளும் அதிகூடிய விருப்பு வாக்குகளுடன்பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.





# நூல் வெளியீடும், சேவையாளர் கௌரவிப்பும்

கங்குவேலி கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் ஞானச்சந்திரன் மல்லிகாதேவி அவர்களினால் எழுதப்பட்ட "கரைசையின் கீர்த்தியும், கலசமணி தீர்த்தமும்" நூல் வெளியீட்டு நிகழ்வுடன் நூலாசிரியர் அவர்களினால் கங்குவேலி கிராமத்தில் சேவையாற்றிய சமூக சேவையாளர்கள் மற்றும் அரச உத்தியோகத்தார்களுக்கான கௌரவிப்பு விருதுவழங்கும் நிகழ்வு கங்குவேலி கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெற்றது.




இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் திரு து.நவரட்னராசா, இந்து சமய அபிவிருத்தி ஒன்றிய செயலாளர் அ.குகராசா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது நூலாசிரியர் ஞா.மல்லிகாதேவி அவர்களுக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் பொன்னாடை அணிவித்ததோடு இலக்கிய ஆளுமைக்காக "கலைசெம்மல்" கௌரவ பட்டமும் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.











# நூல் வெளியீடு

## கலாபூஷணம் எம்.ஏ. பரீது அவர்கள் எழுதிய "நன்னெறிச் சிலம்பு வெண்பா" கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு

மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மூதூரின் மூத்த எழுத்தாளரும், கவிஞருமாகிய கலாபூஷணம் எம்.ஏ பரீது (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்கள் எழுதிய "நன்னெறிச் சிலம்பு வெண்பா" கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த (19) காலை 9:30 மணியளவில் மூதூர் அந்நஹார் மகளிர் மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ. அறூஸ், சிறப்பு விருந்தினராக மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்ரா நளீம், கௌரவ அதிதியாக கிண்ணியா முன்னாள் நகர பிதா வைத்தியர் ஹில்மி மஹ்றூப் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந் நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு மூதூர் கலை இலக்கிய ஒன்றிய தலைவர் கலாபூஷணம் ஏ.எம். மூதூர் முகைடீன் தலைமை தாங்கினார். நூல் அறிமுக உரையை கலாபூஷணம். எம்.சீ.எம். ஷெரீப் (SLAS) நிகழ்த்தியிருந்தார்.

நூல் நயவுரையை விரிவுரையாளர் ஏ.எஸ்.எம். பௌஸி அவர்களும் நூல் ஏற்புரையை நூலாசிரியர் கலாபூஷணம். எம்.ஏ. பரீது அவர்களும், நன்றியுரையை எம். பௌஸாத் (முதலியார்), நிகழ்ச்சித் தொகுப்பினை வி.எம். எம். ஹஸீன் (ஊடகவியலாளர்) ஆகியோரும் நிகழ்த்தினார்கள்.

இந் நிகழ்வில் எழுத்தாளர்கள், கல்விமான்கள் மற்றும் நூலாசிரியரின் குடும்ப உறவினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினால் இவ்வருடத்தில் வெளியிடப்படும் மூன்றாவது நூலாகும். இந் நிகழ்வில் மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினரால் கவிஞர்.கலாபூஷணம் எம்.ஏ. பரீது அவர்களுக்கு பொன்னாடை அணிவிக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.



## அனாமிகா
# பண்பாட்டு மையத் திறப்புவிழா







சேனையூர் அனாமிகா களரி பண்பாட்டு மையம் நூலகம், கலை கூடம் - களரி, ஆவணக் காப்பகம், கணனி கூடம் என எதிர்கால சந்ததியினருக்கு பயன்பெறும் வகையில் திருவாளர் கலாநிதி பாலசிங்கம் சுகுமார் அவர்களின் தலைமையில் இன்று காலை 10.00 மணி அளவில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நடிகர் நாசர் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தோடு கலை கலாசார பண்பாட்டு அலுவல்கள் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என்று பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கூத்துக்கள், நாட்டார் இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டு பாரம்பரிய நிகழ்வுகள் என்று பல நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் அரங்கற்றப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.



# உள்ளூர் ஆளுமைகள்

தோப்பூர் மண்ணில் வாழ்ந்து மறைந்துபோன மகா புருஷர்களையும், வாழ்ந்து கொண்டிருக்கும் வரலாற்று நாயகர்களையும் ஒன்றாய்க் கூட்டி வந்து முற்றத்தில் பாய்போட்டு முப்பாட்டன் கதையெல்லாம் சொல்ல வருகின்றார் எங்கள் மதிப்புக்குரிய

**உதவிக் கல்விப் பணிப்பாளர், மற்றும் எழுத்தாளர் ஹாஜா முகைதீன்** அவர்களின் கன்னிமுயற்சியாக உள்ளூர் ஆளமைகள் என்ற வரலாற்று நூல் வெளியீடு கடந்த 2022.09.25 ஞாயிற்றுக் கிழமை, காலை8.45 மணி, தி/மூ/பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின்

கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தோப்பூரின் உள்ளூர் ஆளுமைகளை தேடிக்கண்டு பிடித்து அவற்றை தொகுத்து நூலுருவாக்கி அதனை வெளியீடு செய்துவைக்கப்பட்ட இந்நூலானது,

மூதூரில் வெளியீடு செய்யப்பட்ட முதுசங்கள் நூல் போன்று கடந்த 14 மாதங்களுக்கு மேலாக நூலாசிரியர் முகநூல் வாயிலாக பிரசுரம் செய்துவந்த ஆக்கங்களை தொகுப்பாக உள்ளுார் ஆளுமைகள் என்ற நூலின் மூலமாக எமக்கு கையளித்துள்ளார்.

## ஜாயா நகர் சகோதரத்துவ ஒன்றுகூடல் :

ஜாயா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று மூதூர் ஆலிம் சேனை கிராமத்தில் ஜாயா நகர் பிரதேசத்தை சேர்ந்த உறவுகளுக்கான சகோதரத்துவ ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போது ஜாயா நகரில் பூர்வீகமாக வாழ்ந்தவர்கள், திருமணம் மற்றும் குடியிருப்பு காரணங்களுக்காக ஜாயா நகரில் தற்போது வசிக்கும் உறவுகளை ஒன்றுசேர்க்கும் நோக்குடன் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் 20 வயதிற்கு மேற்பட்ட சுமார் 150 நபர்கள் கலந்து கொண்டதோடு ஜாயா நகர் பகுதியை சார்ந்த அபிவிருத்தி, கல்வி முன்னேற்றம், ஏனைய சமூகவியல் சார்ந்த நடைமுறைகளை ஒழுங்கு செய்வதற்கு என்று ஒரு நிருவாக குழுவொன்றும் தேர்வு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# எது சுதந்திரம்...?



B.R. Riza
Eastern University (R)

சுதந்திரம் என்பது ஆளுக்கொரு விதத்தில், நேரத்திற்கு ஒரு கோணத்தில் வியாக்கியானம் செய்யப்படுகிறது. அது அவ்வாறுதான் சொல்லப்பட வேண்டிய தேவை உள்ளது. காரணம் ஒரு நபருக்கோ, ஒரு சமூகத்திற்கோ இன்னொருவரினதோ, பலரினதோ தலையீட்டால் அனுபவிக்க முடியாமல் இருந்த ஒன்றையோ, அல்லது தன்வசப்படுத்த முடியாமல் போனதையோ விரும்பிய முறையில் கையாளத் திறந்து விடப்படுவதே பொதுவாக சுதந்திரம் என்ற சொல்லால் சுட்டப்படுகின்றது.

சில நாடுகளில் சில பிரதேசம் புளக்கத்திற்கு விடப்பட்டிருப்பதையோ, சில செயல்கள் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதையோ, சில வளங்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டிருப்பதையோ, சில கருத்துகளை உரைப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதையோ முன்சென்ற காலங்களில் தடுக்கப்பட்டு தற்போதைய தடைகள் தகர்த்தப்பட்ட எத்தனையாயிரம் விடயங்களையும் சுதந்திரம் என்ற சொல்லால் தான் பார்க்க முடியுமாக இருக்கிறது.

ஆகவேதான் சுதந்திரம் என்பது தனிநபர், சமூகம் என்று ஒவ்வோர் பார்வையிலும் தனிப்பட்டதும், பொதுவானதும் என்ற பார்வை வெவ்வேறாக கிளைத்துப் போயிருக்கிறது.

ஆனாலும் முழுமையான சுதந்திரம் என்பது முன்னாட்களில் விதித்த தடைகள் மரணித்துப்போவதுடன் அதற்குப் பின்னரான காலப்பகுதிகளில் அத்தடைகள் பிரசவிக்காமல் இருக்கவும் வேண்டும். இதன்படி ஒரு தடை தகர்ந்து போகவும், இன்னுமொரு தடை தோன்றாமல் இருக்கவும் ஒரு சமூகத்தில் எல்லோரினதும் உழைப்பு அவசியமாகின்றது. அந்த வகையில் ஒவ்வொருவரும் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு போன்ற அனைத்துத் தளங்களிலும் உச்ச கட்ட ஆரோக்கியமான செயற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பாக எமது தாய்நாடு அன்மையில் கொண்டாட மகிழ்ந்த சுதந்திரம் பொருளாதார தளத்தை அடிப்படையாகக் கொண்டதை நாமெல்லாம் மறந்து போயிருக்கலாம்.

அந்நிய நாட்டவர்களின் வளச்சுரண்டல்களில் இருந்து விடுபடுவதே அன்று (1948 க்கு முன்னர்) தேவையாக இருந்த போது எல்லோராலும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனாலும் இன்று அந்த சுதந்திரம் என்ன வடிவத்தில் உள்ளது என்பதை ஒவ்வொரு சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போதாவது சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். வளங்களை நேரடியாகச் சுரண்டியவர்கள் மறைமுகமாகச் சுரண்டத் தொடங்கியதைத்தான் நாமெல்லாம் சுதந்திரம் என்பதாகப் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

எந்த சுதந்திரத்தை வேண்டி எம்தேசத்து சமூகம் ஒரு கோட்டில் கைகோர்த்து நின்றதோ அதே நேர்கோட்டில் ஆளுக்கொரு பக்கத்தில் நின்றுகொண்டு வளச் சுரண்டலை ஆதரித்தும் , மறுத்தும் கயிறிழுக்கும் போட்டியில் அல்லவா நாமெல்லாம் காலம் கழிக்கின்றோம். உண்மையிலே நாம் முயன்று பெற்ற சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை, அதற்கான ஏற்பாடுகளும் இல்லை என்பதையே ஒவ்வொரு தனிநபர் வாழ்க்கையினதும் பொருளாதாரப் பின்னடைவுகள் காட்டிநிற்கின்றன.

நாம் வாழும் சூழல் வளங்களால் வலுப்பெற்ற தேசமல்லவா? அப்படியிருந்தும் நாட்டின் பாதிப்பகுதியின் வளங்கள் பயன்படுத்தப்படாமல் ஏன்தான் பார்வைக்காக மட்டுமே பாதுகாக்கப்படுகின்றன? அல்லது அவைகள் எதற்காக நியாயமற்ற முறைகளில் நாடு கடத்தப்படுகின்றன?.

இந்த இடத்திலே இரண்டு முக்கியமான விடயங்களைச் சுட்டிக் காட்டியாக வேண்டும். படிக்கும் உங்களுக்கும் இப்பெயர்கள் புதிதாகக் கூட இருக்கலாம். அவைதான் தன்னிறைவுப் பொருளாதாரம் மற்றும் சுயசார்புப் பொருளாதாரம்.

**சுயசார்புப் பொருளாதாரம்**

ஒருநாட்டிற்குள் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொண்டு தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் செயற்பாடுகள் சுயசார்பான பொருளாதாரம் எனப்படும்.

அதாவது சுயம் என்பது எங்களிடமுள்ள என்ற அர்த்தத்தையும், சார்ந்த என்ற சொல்லானது எங்களிடமுள்ள வளங்களை மட்டும் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்வதனையும் குறிக்கின்றது. மேலும் பொருளாதாரம் என்ற சொல்லானது பொருளையும் ஆதாரத்தையும் கொண்டது. அதாவது பொருளை அல்லது மூலப் பொருளை ஆதாரமாகக் கொள்ளல் என்றும் மூலப் பொருட்களை ஆதாரமாகக் கொண்டு உற்பத்திகளை மேற்கொள்ளல் என்றும் பொருள்படுகின்றது.

அதுபோல தன்னிறைவுப் பொருளாதாரம் எனப்படுவது, ஒரு நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அடிப்படை மூலப் பொருட்கள் சொந்த நாட்டில் இல்லாவிட்டாலோ அல்லது பற்றாக்குறையாகக் காணப்பட்டாலோ வேறு நாடுகளில் இருந்து தனக்குத் தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்து அதனைக் கொண்டு உற்பத்திகளை மேற்கொண்டு அதன் மூலம் தன்நாட்டினுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்வது தன்னிறைவுப் பொருளாதாரம் என்பதாக விளக்கப்படுகிறது.

உதாரணமாக இலங்கைக்கு வருடத்திற்கு 200 மெற்றிக் தொன் அரிசி தேவைப்படுமாயின் அதற்கான விதை நெல்லை (மூலப் பொருள்) இன்னொரு நாட்டிடம் இருந்து பெற்று தன் நாட்டில் அரிசியை உற்பத்தி செய்து தன் நாட்டின் அரிசித்தேவையில் நிறைவைக் காண்பது தன்னிறைவுப் பொருளாதாரமாகும்

அந்த வகையில் பிறநாடுகள் தமது நாட்டின் தன்னிறைவுப் பொருளாதாரத்திற்காக 1505 காலப்பகுதியிலிருந்து அள்ளிச் சென்ற வளங்களைத் தக்கவைப்பதுடன், அதற்காக அவர்கள் செய்த உபாயங்களைத் தகர்த்தெறிவதே எமது அன்றைய சுதந்திரத்தின் கோரிக்கையாக இருந்தது.

**அவ்வாறாயின் அதற்கான விடையாக 1948 ஆம் ஆண்டு எமது தேசம் சுதந்திரம் பெற்றதில் இருந்து எமது வளங்களை நாமே பயன்படுத்தும் சுயசார்பான பொருளாதார முறை எழுச்சி பெற்றிருக்க வேண்டுமல்லவா?**

ஆனாலும் ஒரே தேசத்திற்குள் இடம்பெற்ற மனக்கசப்புகளால் எம் கைகளாலேயே எமது வளங்கள் பல பொழுதுகளில் மறைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும், கவனிப்பாரற்றும் வந்துள்ளன. இருந்தாலும் குவிந்து போயுள்ள எம் தேசத்து வளங்கள் ஒன்றும் இன்னும் குறைந்துவிடவில்லை. துரதிர்ஷ்டவசமாக சுயசார்பான பொருளாதார முறைமையை இந்நாட்டில் இன்னும் முழுமையாகக் கட்டியெழுப்ப முடியாமல் இருப்பதற்கான காரணம் சுயமுயற்சியின்மை , உற்பத்திகள் செய்யாமை தவிர்ந்த வேறு காரணங்களை விட்டெறிந்துவிட்டு நடக்கும் வழிகளைப் பார்க்க வேண்டும்.

ஆம் எமது நாட்டின் சரி பாதிப் பகுதி எதற்குமே பயன்படுத்தாமல் வைக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் எமது மூலப்பொருட்களை அடுத்த நாடுகளுக்கு தாரைவார்த்து அதன் முடிவுப் பொருட்களை அதிக பணம் கொடுத்து வாங்குவதானது நாம் போராடிப் பெற்ற சுதந்திரத்திற்குச் செய்யும் மரியாதையாக ஒருபோதும் ஆகிவிடப்போவதில்லை. எனவேதான் எமக்குள்ள அவசியப்பாடு என்னதான்? என்றால் பிற நாடுகளில் எம்நாட்டு மூலப் பொருட்களை உற்பத்திப் பொருட்களாக மாற்றுகின்ற அந்த மூளையையும், முயற்சியையும் நாம் ஒவ்வொருவரும் கையிலெடுக்க வேண்டியதே இன்றைய அவசியப்பாடாக இடம்பிடித்துள்ளது.

ஆனாலும் நாம் எல்லோருமே சிந்திக்கும் முறையில் அதைச் செய்வதற்கு ஒருபோதும் முடியாது. அதாவது எமது அரசாங்கமே எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் அவர்களே தொழிற்சாலைகளை நிறுவி ஆட்களை வேலைக்கு அமர்த்த வேண்டும் என்று அடிமைச் சமூகத்தின் வாழ்வியலை மீண்டும் மீண்டும் எதிர்பார்ப்பது நமது வெற்றிக்கான, பொருளாதார விடுதலைக்கான, நாம் உணர வேண்டிய சுதந்திரத்திற்கான, நாம் எழுப்பும் கோசங்களுக்கான விடையாக இருக்க முடியாது.

# இரவில் ஒளியுள்ள

## இடத்திற்கு ஏன் பூச்சிகள் சுற்றி வருகின்றது?



**Niyas Aasha Falin**
B.Sc, SEUSL

பூச்சிகளை ஒளி நாட்டம் அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒளியியல் நாட்டம் கொண்டவை (Positively Photostatic), ஒளியியல் நாட்டம் அற்றவை (Negatively Phototaxic).

ஒளியியல் நாட்டம் அற்றவைகளை பற்றி எமக்கு தேவையில்லை. ஒளியை நோக்கி வரும் பூச்சிகளை மட்டும் பார்ப்போம். பல பில்லியன் வருடங்களாக, அதாவது செயற்கை ஒளி, ஒளி மூலகங்கள் கண்டுபிடிக்கப்படாத அதிபழங் காலத்தில் இருந்து பரிணாம வளர்ச்சியில் தங்களைத் தகவமைத்துக் கொண்ட பூச்சியினங்கள் அவை. இவ்வாறான உணர்திறன் பூச்சிகளிற்கு மாத்திரம் உரித்தானது இல்லை. மனிதன், விலங்கு, நுண்ணங்கி ஏன் சில தாவரங்களிற்கும் காணப்படுகின்றது. இதனால்தான் இருள் ஆனதும் எமக்கு தூக்கம் வருகின்றது. அதுபோல சூரியனை கண்டதும் சூரிய காந்தி மலர் திரும்புகின்றது.

- **கண்களும் ஒளி நாட்டமும் :**

ஒளிவாங்கி கலங்கள் (கட்புள்ளி - Eyespot) முதலில் ஜெலிபிஸ், கடல் அணிமணிகளில் தோற்றம் பெற்றது. இவை காலப்போக்கில் பரிணாம வளர்ச்சியில் கண்களாக திரிபு பெற்றது. கண்களில் ஒளிவாங்கும் கலங்கள் (Photoreceptor Cell) மற்றும் நிரவுருமணிகள் (Pigment Cell) உள்ளடக்கியதாக காணப்படும். அதன் தொடர்ச்சியில் பூச்சிகளுக்கு இவை காணப்படுகின்றது. இக்கலங்கள் ஒளிச்செறிவு அடிப்படையில் அங்கிற்கு அங்கி வேறுபட்டதாக காணப்படும்.

சில பூச்சிகளுக்கு அக்கதிர்கள் செறிவான கதிர்களாக இருக்க வேண்டும். அதாவது உயர் ஒளிச்செறிவு (intensity) அதிகமாக இருக்கவேண்டும். உதாரணமாக ஈக்களால் இரவில் சரியாகப் பறக்கமுடியாது. அவைகள் சூரிய வெளிச்சத்திற்குத் தன்னைத் தகவமைத்துக்கொண்டவைகள். சந்திரனின் ஒளிச்செறிவு அவற்றிற்குப் போதாது. அதுபோல அந்துப்பூச்சி இரவில் சந்திர ஒளிக்கு இயைப்பாக்கம் கொண்டவை. அவற்றால் சூரிய ஒளியினை தாக்குபிடிக்க முடியாது.

உதாரணமாக மனிதனை எடுத்துக்கொண்டால் மனிதனின் சமநிலை பேணுவதில் மனிதனின் உள்காதுக் குள்ள நத்தைச் சுருள் (Membranous labyrinth) என்னும் ஒரு பகுதியில் காணப்படும் Endolymph என்ற திரவம் பங்கெடுக்கும். இது எமது உடலின் சமநிலையில் உள்ளோம் என்பதை இத் திரவத்தினை அசைவைக் கொண்டு உணர் மயிர்கள் மூலமாக நமது மூளை உணர்ந்து கொள்ளும். நீங்கள் சிறுவயதில் சுற்று இராட்டினத்தின் ஏறி விளையாடி இருப்பீர்கள். இறங்கிய பின்னரும் நீங்கள் சுற்றிக்கொண்டு இருப்பதுபோல சில நொடிகள் உணர்வீர்கள். இதற்கான காரணம் உங்களின் உட்காதில் உள்ள குறித்த பாயி அசைவில் இருப்பதுவே....

எமது சமநிலை எவ்வாறு உட்காதின் பாயி அசைவை கொண்டு தீர்மானிக்கப்படுகின்றதோ அதுபோல சில பூச்சிகளின் சமநிலை, திசையுணர்நிலைகள் சூரிய, சந்திர வெளிச்சத்தை நம்பி உள்ளது. அவ்வியற்கை ஒளிகள் நேர் மற்றும் தொடர்கதிர்களாகும். அக்கதிர்களை வைத்து பூச்சிகள் தங்களை நிலைப்படுத்திக் கொண்டு பறக்கின்றன.

- **மின்குமிழ் ஒளியும் பூச்சி அசைவும்**

இரவில் மின்குமில்களை அல்லது விளக்கை சூழ்ந்து பூச்சிகள் பறப்பது ஏன் என்று ஓரளவு ஊகிக்க முடிந்து இருக்கும் உங்களிற்கு. மின்குமிழில் இருந்து வரும் ஒளியானது தொடர் மற்றும் நேர்கதிர்கள் அல்ல. ஒரு குறித்த திசை இல்லாத ஒளி பரப்பும் கதிர்கள் அலைவுக் கதிர்கள் எனப்படும். இரவு நேரத்தில் விளக்கில் இருந்து வரும் ஒளியானது செறிவு மிக்கதாக இருப்பினும், நேர்கதிர்களாக இல்லாது அலைகின்ற காரணத்தால் அவ்வொளி எங்கெல்லாம் அலைகிறதோ அதனைக்கொண்டு தன்னை நிலைப்படுத்திக் கொள்ள பூச்சிகள் வட்டவடிவில் மின்குமிலை அல்லது விளக்கை சுற்றி வட்டவடிவில் தள்ளாடிப் பறக்கின்றன.

ஒளியும் அண்மைத் தொலைவில் இருந்து வருவதனால், நேர்கோட்டில் பறக்கிறோம் என்று அவைகள் ஒரு வளைவான பாதையைத் தேர்ந்தெடுக்கும். அப்படி ஒவ்வொரு ஒளிக்கதிருக்கும் ஒத்த வளைவான பாதைக்குத் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும்பொழுது அது நேர்கோட்டுப் பாதையாக அல்லாமல் வட்டப்பாதையாக அமைந்து விடுகின்றது.

அப்படிப் பறக்குந்தோறும், அது ஒளிமூலகத்தை நோக்கிச் சென்று... வெப்பம் அதிகரிக்கக் கண்டு தம் திசையை மாற்றிக் கொள்கின்றன. அதையே நாம் பூச்சிகள் விளக்கைச் சுற்றிப் பறப்பதாகச் சொல்கிறோம். இது பூச்சிகளைப் பொறுத்தவரை ஒளிமாசு (light pollution). பாவம், அவைகளின் இயல்பு வாழ்க் கையில் நம் வசதிகள் குறுக்கிடுகின்றன. இதனால்தான் சில வேளைகளில் நாங்கள் மின்குமிழை சூழ வேப்பிலை கட்டி விடுகின்றோம்.

**பூச்சிகளிற்கு ஒளிச்செறிவை மட்டுப்படுத்துக் கொள்ளவும் இன்னும் அலைவு கதிரை தடுக்கவும் இவ்வாறு உதவுகின்றோம்....**

**கிள்ளிவிட்டு தாலாட்டுகின்றோம் நாங்கள்....**

**அதுபோல உணவகங்கள் மற்றும் சில ஆய்வுகூடங்களில் பூச்சிகளை கொல்ல இம்முறையை அடிப்படையாக்கொண்ட *Fly Catcher* பயன்படுகின்றது.**



# மூதூர் பாரம்பரியமிக்க வர்த்தக நகரம்

## இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மூதூரின் பங்களிப்பு



MSM. Bishri
B.B.A, PGDE

மூதூர் பிரதேசம் கடலாலும், ஆறுக ளாலும் சூழப்பட்ட ஓர் இயற்கை வளங்கள் நிறைந்த வரலாற்றுப் பிரசித்தி மிக்க ஊராகும். செந்நெல் விளையும் பசுமை தரும் விவசாயப் பூமியும், அள்ள அள்ளக் குறையாத

மீன்வளங்கள் நிறைந்த இயற்கையின் கொடையான இந்து சமுத்திரத்தின் கடல் வளமும், முதுரை, பாலை, யாவரனை, சோ முந்திரிகை, சமுலை, கருங்காலி, மதுரை மரங்கள் நிறைந்த பச்சை பசேலென காட்சி தரும் பசுமையான காட்டு வளமும், கால் நடைகள் பல்கிப் பெருகும் பசுமை தரும் புல்வெளிகளைக்கொண்டு காணப்படுகிறது.

நீர்வளமும், நிலவளமும் கொண்ட துடன் இலங்கையில் நீளமான மகாவலி நதியானது நெளிவு சுளிவுகளுடன் மூதூர் நிலவளத்தை ஊடறுத்து கொட்டியாரக் கடலில் சங்கமிக்கும் ஏற்றமிகு ஊரே மூதூர்.

மூதூர் பிரதேசம் ஐவகை நிலங்களில் முல்லை, நெய்தல், குறிஞ்சி, மருதம் ஆகிய நால் வகை நிலங்களை கொண்ட மைந்த ஓர் அழகிய ஏற்றுமதி வளை யமாகும். போர்த்துக்கேயர் ஆட்சிக்கு முன்னைய காலம்தொட்டு 1985 ஆம் ஆண்டு வரை மூதூரிலிருந்து ஏராள மான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக் கின்றன. இலங்கையின் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் மூதூர் மக்களின் பொருளாதாரப் பங்களிப்பு அளப்பெரியது.

பொலநறுவை இராசதானியாக இருந்த போதும் கண்டி இராச்சியத்தின் போதும் அதன் ஏற்றுமதி இறக்குமதி துறை முகமாக திருகோணமலை துறைமுகம், கொட்டியாரத் துறைமுகம் என்பன பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது. திருகோண மலைத் துறைமுகத்தில் அமைந் துள்ள "கொட்டியாரக்குடா" சோழ மண்டலத் துறைமுகத்தில் இருந்து வரும் வணிகக் கப்பல்களுக்கு வணிகத்துறை முகமா கவும், தரிப்பிட துறைமுகமாகவும் விளங் குகின்றது.

கண்டி இராச்சியத்தின் போதும், மத்திய மலைநாட்டில் இருந்துகொண்டு வரப்படும் பாக்குகள், யானைகள், நெல், மரம், தேன் என்பன கொட்டியாரக்குடா வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் துணிகளும் ஏனைய பொருட்களும் ஏனைய துறைமுகங்களில் இருந்து வந்திறங்கின. இந்த வணிகத்தில் செட்டி மார்களும், முஸ்லிம்களும் அதிகளவில் ஈடுபட்டார்கள். கண்டி இராச்சியத்தின் போதும் கொட்டியாரத் துறைமுகம் பிரதான ஏற்றுமதி இறக்குமதி துறை முகமாக காணப்பட்டது.

கொட்டியாரத்தில் வசித்த முஸ் லிம்கள், திமிலர், வேளாளர், கரையார் போன் றோர்கள் அரசனின் நிலங்களை தம் சொந்த செலவில் விவசாயத்திற்கு பயன் படுத்தினார்கள். ஒவ்வொரு தலையாரியும் ஒரு கச்சுத் துணியும், 150 பிங்கோசும் (Pingos) வரியாகச் செலுத்தவேண்டும். திசாவ எனும் அதிகா ரிக்கு ஆண்டுதோறும் ஒரு சேலைத் துணியும், 15 றிக்ஸ் டொலர் பணமும் செலுத்தி வந்துள்ளனர். பிரித் தானிய ஆட்சியின் போது ஒரு றிக்ஸ் டொலர் = ஒரு சிலிங் 6 பென்ஸ் என நாணய மாற்றம் செய்யப்பட்டது.

ஒல்லாந்தர் ஆட்சியின் போதும் (1658 தொடக்கம் 1796வரை) கொட்டியாரத் துறை முகம் ஏற்றுமதி, இறக்குமதி துறைமுகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஆங்கி லேயர் ஆட்சியின்போதும் (1796 தொடக்கம் 1948 வரை) கொட்டியாரத் துறைமுகத்திற்கு பிரித் தானிய வணிக கப்பல்கள் துணிகளை கொண்டு வந்து விற்பனைசெய்து விட்டு பாக்குகளை வாங்கி செல்வதற்காக வந்து சென்றுள்ளன.

முன்னொரு காலத்தில் மூதூரில் முத்துக் குளித்தல் தொழில் பிரபல்யம் பெற்று காணப்பட்டது. எடுக்கப்பட்ட முத்துக்கள் கிண்ணியா மற்றும் திருகோணமலை வியாபாரிகளுக்கும் விற்பனை செய்யப் பட்டுள்ளன. முத்து எடுத்த ஊர் என்பதனால் தான் மூதூர், முத்தூர் என்ற பெயர் வரக் கார ணமாயிற்று.

மேலும் றொபெட் நொக்ஸ் தலைமை யிலான வணிகக் கப்பல் 1659 இல் கொட்டி யாரத் துறைமுகத்தில் தரித்து நின்றபோதும் றொபெட் நொக்ஸ் உட்பட 29 கடலோடி களும் கண்டி அரசனால் கைது செய்யப் பட்டார்கள். றொபட் நொக்ஸ் கைது செய்யப் படுவதற்கு முன் மூதூரில் துணி வியாபா ரத்திலும் சில நாட்கள் ஈடுபட்டுள்ளார்.

ஆங்கிலேயர்கள் வாசனை சரக்கு மற்றும் துணிகள் வணிகத்திற்காக மூதூர் கொட்டியா ரத்தில் ஒரு தொழிற்சாலையை உருவாக்கு வதற்கு கண்டி அரசனிடம் அனுமதி பெற்றனர்.

மூதூர் கொட்டியாபுரத்து மண்வளம் விவசாய பயிர் செய்கைக்குரியதாகக் காணப் படுகிறது. இங்கு கூடுதலாக நெல் பயிரிடப் பட்டது. அத்துடன் நெல்லை சேமிப்பதற்கு மூதூர் பால நகரில் சந்தைப்படுத்தும் களஞ் சியம் அமைக்கப்பட்டு ஆயிரக் கணக்கான நெல் மூடைகள் சேமிக்கப்பட்டன. மட்டக் களப்பு பிரதான வீதியில் 3cd சந்திக்கு அருகில் உள்ள PMB(Paddy Marketing Board) நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் பராமரிக்கப் பட்ட அரிசி ஆலை மூலம் அரிசி பதனி டப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. நெல், வைக்கோல் என்பனவும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

மகாவலி கங்கையின் கங்கை கரையோரப் பிரதேசங்களில் கொக்கோ, லைபீரியன் கோப்பி, புகையிலை பயிரிடக்கூடிய மண்வளம் காணப்பட்டது. 1985ஆம் ஆண்டு வரை புகையிலை பயிரிடப்பட்டது. அத்துடன் சிறந்த காட்டு வளம் காணப்பட்டதால் முதிரை, பாலை, மரமுந்திரிகை, சமுலை, கருங்காலி மரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

வேதத்தீவு ஆற்றுக்கும் பால் துறைக்கும் இடைப்பட்ட ஜோன் காடு (ஜோன் என்பவருக்கு உரிமையான நிலம்) அப்பகுதியில் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலப்பகுதியில். நாட்டோடுகள், செங்கற்கள் உற்பத்தி செய்யப்பட்டு வத்தைகள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட் டுள்ளன. அதற்கான தடயங்கள் இப்போதும் காணப்படுகின்றன.

ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்தில் திருகோணமலையில் நிர்மாணிக்கப்பட்ட பெருமளவிலான கட்டடங்களுக்கான மூலப் பொருட்கள் மூதுர் பகுதியிலிருந்து கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அத்துடன் சாபிநகர், ஜின்னாநகர் பிரதேசம் செங்கல் உற்பத்தியில் பிரபல்யம் பெற்று காணப்படுகிறது. தற்போது செங்கற்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளிப்பிரதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தாஹா நகர், கோயில் வீதி, பழைய கிராமக்கோடு பகுதி மக்கள் மட்பாண் டங்கள் உற்பத்தியில் ஈடுபட் டதுடன் வெளியூர்களுக்கும் ஏற்றுமதி செய்தனர்.

கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாக காணப்பட்டது. பசு மாடுகள், எருமை மாடுகள் கூடுதலாக காணப்பட்டதுடன் மாடு களை கிண்ணியா, கந்தளாய், கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கும் விற்பனை செய்தனர்.

மூதூரில் இருந்து சீனக்குடா, கந்தளாய் புகையிரத நிலையம் வரை தரைவழியாக மாடுகளை துரத்திச் சென்று ரயில் வண்டிகள் மூலம் கொழும் புக்கு ஏற்றுமதி செய்தனர். அத்துடன் பசும்பால், தயிர் என்பனவும் வெளிமாவட்டங்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. அத்துடன் மாட்டு வண்டிகள் தயாரிப்பிலும் மூதூர் பிரபல்யம் பெற்றிருந்தது.

# நத்வதுல் உலமா அரபுக் கலாசாலையின் 48 ஆவது பட்டமளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்















நத்வதுல் உலமா அரபுக் கலாசாலையில் 48 ஆவது பட்டமளிப்பு விழா நிகழ்வு கடந்த (2022.08.13) சனிக்கிழமை நத்வதுல் உலமா பெண்கள் பிரிவு வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 98 ஆலிம்களும், 24 ஆலிமாக்களும், 22 ஹாபிழ்களுமாக பட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டன. நத்வத்துல் உலமா அரபுக் கல்லூரியின் தலைவர் மற்றும் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எம். கரீம் ( நத்வி) அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அஷ்ஷெய்க் எஸ்.எல். நௌபர் (கபூரி) அவர்களும், சிறப்பு அதிதியாக மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் ஜனாப் எம்.எம்.ஏ. அருஸ் அவர்களும், கௌரவ அதிதிகளாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம். ஜவாத் ( நளிமி) அவர்களும், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி முனவ்வறா நளீம் அவர்களும், அதிதியாக மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம்.எம். அப்பாஸ் அவர்களும் நிருவாக உறுப்பி னர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், நலன் விரும்பிகளும், நன்கொடையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பின்வரும் கௌரவ உயர் விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

- **சேகுந் நத்வா விருது :** இது நத்வாவில் வழங்குகின்ற உயர் விருதாகும். இம்முறை அஷ்ஷெய்க் எம்.எம். கரீம் ( நத்வி) அவர்களுக்கு 1981 தொடக்கம் நிருவாக உறுப்பினராகவும், 1993 தொடக்கம் பொருளாளராகவும், 2015 தொடக்கம் தலைவராகவும், 1994 தொடக்கம் இற்றை வரை அதிபராகவும், 2017 இல் பெண்கள் பிரிவை மீளுருவாக்கம் செய்தமைக்காகவும் இவ்விருது வழங்கி வைக்கப்பட்டது. இதற்கு முன்னர் இவ்விருது முன்னால் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.ஏ. ஜப்பார் (பாரி) அவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- **நத்வாவின் உயர் கௌரவ விருது :** இவ்விருது நத்வாவின் வரலாற்றில் மூதூரின் கல்வித் துறையில் பங்காற்றியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமையஇவ்விருது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம். ஜவாத் ( நளிமி) அவர்களுக்கு நிருவாக சபையின் ஒப்புதலுடன் தலைவரினால் பொன்னாடை அணிவித்து கௌரவித்து வழங்கி வைக்கப்பட்டது.

- **பிரதம அதிதிக்கான நினைவுச் சின்னம் :** இது நீண்டகாலம் இக்கல்லூரியோடு தொடர்புபட்ட எமது கல்லூரியை நேசிக்கும் அஷ்ஷெய்க் எஸ்.எல். நௌபர் ( கபூரி) அவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

- **கலாநிதி மற்றும் முதுமாணி முடித்தோருக்கான கௌரவம் :** இது எமது நத்விப் பட்டத்தை பூர்த்தி செய்து கலாநிதிப் பட்டத்தை உம்முல் குறா பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்த அஷ்ஷெய்க் எம்.எம்.எம். ஜன்னா அவர்களுக்கும், முதுமா ணிப் பட்டத்தை லண்டன் றொபேர்ட் கோல்டன் பல்கலைக்கழகத்தில் பூர்த்திசெய்த அஷ்ஷெய்க் எம்.வை. எம். அஸ்லம் அவர்களுக்கும் மற்றும் முதுமாணிக்கான பட்டக் கற்கையை பூர்த்திசெய்த அஷ்ஷெய்க் ஜே.எம். ஹூசைன் (நத்வி) அவர்களுக்கும் வழங்கி கௌர விக்கப்பட்டது.

**பல்கலைக் கழகத்தை உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் முதல் பட்டத்தை பூர்த்தி செய்தோருக்கும் கற்றுக் கொண்டி ருப்போருக்கும் இக்கௌரவம் வழங்கி வைக்கப்பட்டது.**



# மனாருல்

## மகளிர்

மூதூரின் பெண்கள் கல்வி முன்னேற்றத்தின் முன்னணி நிறுவனமான மனாருல் ஹூதா மகளிர் அரபுக் கல்லூரி தனது 11ஆவது பட்டமளிப்பு விழா கடந்த 27.08.2022 அன்று அன்றைய தினம் ஷரீஆ கற்கைநெறியை பூர்த்தி செய்த 38 மாணவியரும், பகுதிநேர ஹிப்ழ் பிரிவில் அல்குர்ஆன் மனனத்தை பூர்த்தி செய்த இருவர் பட்டம் பெற்றுக்கொண்டதுடன்,



# பட்டமளிப்பு விழா - 2022




ஏ.பி.எஸ் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவானது கடந்த ஞாயிற்றுக்கிழமை (14.08.2022) அன்று மிக விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பேராசிரியரான பால சுகுமார், திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் சிரீதரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுதர்சன் மற்றும் கல்லூரியின் விரிவுரையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் 60ற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தங்களது பட்டங்களைப் பெற்றுக் கொண்டதோடு இக் கல்லூரியினால்
வழங்கப்படும் பட்டங்கள் யாவும் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஊடாக வழங்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.



ஏ.பி.எஸ் கல்லூரியானது, இலங்கையில் குறுகிய காலத்திற்குள் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை உங்களுக்குச் சரியான நேரத்தில் கொண்டு வரும் செலவு குறைந்த கல்வியுடன் தேசத்தை புதிய வாய்ப்புகளை நோக்கி அழைத்துச் செல்வதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் மூதூரில் செயற்பட்டு வருகின்றது.









# ஹுதா

## அரபுக் கல்லூரி – மூதூர்

பல்கலைக்கழகம் தேர்வான 04 மாணவியர் கௌரவிக்கப்பட்டனர். பட்டம்பெற்றுக் கொண்டவர்களில் அறுவர் இம்முறை வெளியான பரீட்சை முடிவுகளின் பிரகாரம் உயர் கல்வியை தொடர்வதற்காக தேர்வு செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இளவயது திருமணங்களை தவிர்த்து குடும்பத்துக்கோர் ஆலிமா எனும் எண்ணக்கருவுடன் 1992.8.12 அன்று உருவாக்கப்பட்ட இக் கலாநிலையத்தினூடாக நூற்றுக்கு மேற்பட்டோர் பட்டம் பெற்றுள்ளதுடன் தொடர்ந்தும் பலபுதிய கல்வி திட்டங்களினூடாக நவீன உலகை எதிர்கொள்வதற்கான மகளிரை தயார் செய்துவருகின்றது.








# கல்வி மூலம் எதிர்பார்க்கப்படும் மானுடப் பண்புகளும் இலங்கையின் கல்வி முறைமையும்”

தொடர் - 06




**A. S. Mohammed Fousi**
B.A.Hons, M.A,PGDE
Teacher Educator (SLTES)
Lecturer - Uva NCOE Bandarawela.




இவற்றையெல்லாம் தாண்டி மறைக்கலைத்திட்டம் என்பதன் மூலமும் மானிடப் பண்புகளை மாணவர்களிடையே வளர்த்து, நாளைய உலகின் ஒழுக்க சீலர்களாய், மானுடம் நிறைந்த மகத்தான பண்புக் கோலத்தினுள் தங்களை இற்றைப்படுத்திக் கொண்டவர்களாய் இந்த மாணவர் சமூகம் உருவாக்கப்படும் என்ற ஆழமான எதிர்பார்ப்பும் வெற்றியை நாடியதாய் உள்ளது என்றால் மறுப்பதற்கில்லை. அந்தவகையில், தேசிய கீதத்திற்கும் தேசியக் கொடிக்கும் மதிப்பளித்தல், அடுத்த மதத்தவரை மதித்தல், பாடசாலை கீதம், பாடசாலைக் கொடி என்பனவற்றைப் பாதுகாத்தல், பாடசாலையின் சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துதல், சக மாணவர்களுக்கு உதவுதல், அவர்களது இன்ப, துன்பங்களில் பங்கேற்றல், சமயப் பெரியோர்களைக் கௌரவப்படுத்தல் முதலிய பிறரால் சொல்லிச் செய்யப்படாமல் மாணவர்களின் உள்ளார்ந்த நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகவே இந்த மறைக்கலைத்திட்டம் அமைகின்றது. இதுவும் நாளைய உலகின் நல்லொழுக்கம் நிறைந்த மானுட சமூகமாக மாணவர் சமூகமும் ஆசிரியர் குழாமும் மாறுவதற்கு வாய்ப்பளிக்கின்றது எனலாம்.

இவற்றை விட மனவெழுச்சிசார் சிக்கல்களுக்குள் சிக்கித் தவிக்கும் மாணவர்களும் ஏனைய மாணவர்களைப் போல கல்வியைப் பெற வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டும் இலங்கையின் விஷேட கல்வி முறைமை அமைந்திருப்பதைக் காணலாம். விஷேட தேவையுடைய மாணவர்களுக்கும் அவர்களுக்கு ஏற்ற வகையிலான கல்விப் போதனைகளை வழங்கும் வகையில் விஷேட கல்விப் பிரிவு என்ற நிலையில் விஷேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு அத்தகைய மாணவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக் கூடிய விதத்திலான, திட்டமிடப்பட்ட அடிப்படையிலான கல்வி முறைமைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையானது, கல்வி மூலம் எதிர்பார்க்கின்ற சிறந்த மானிடத்தை அடைவதற்கானதொரு முனைப்பான கல்வியை நடைமுறையிலுள்ள இலங்கையின் கல்வி வழங்கி வருகின்றமையை உறுதிப்படுத்துகின்றது. ஒரு தாய் தன் பிள்ளை மீது காட்டும் அன்பு, அரவணைப்பு, காப்பு, கணிப்பு என்பனவற்றை மாணவர்களுக்கு இந்த விஷேட கல்வி வழங்குவதன் மூலம் மனிதப் பண்புகள் கட்டியெழுப்பப்படும் நிலை உருவாகியிருக்கின்றது எனலாம்.

இவற்றோடு, உட்படுத்தல் கல்வி (Inclusive Education), பிள்ளைநேயக் கல்வி(Child Friently Education) முதலிய கல்வி முறைமைகள் திட்டமிடப்பட்ட முறையில் பாரியளவு நிதியொதுக்கீட்டின் கீழ் UNICEF, UNESCO, SAVE THE CHILDREN, GIZ, ROOM TO READ முதலிய சர்வதேச, உள்ளூர் நிறுவனங்களின் அனுசரணையுடன் இலங்கையின் கல்விப் புலம் சார்ந்தவர்களால் முன்னெடுக்கப்படுவதானது வரவேற்கத் தக்கதாகும். இவற்றின் மூலம் பாடசாலை கற்றல் - கற்பித்தல் சூழலுக்குள் செல்லும் மாணவர்கள், அங்கிருந்து வெளியேறும்போது கல்வியினால் அடைய எதிர்பார்க்கின்ற தரமான, பண்புசார் விருத்தியுள்ளவர்களாக பரிணமிப்பார்கள் எனலாம்.

(தேடல் நீளும்...



## நம்பிக்கை

நம்பிக்கையை உன் மனதில்
விதைத்துக் கொள்.
மாற்றங்களை உனக்குள்ளே
உருவாக்கு.
உன் திறமையை வெளிக்காட்டு.
உன் பின்னால் பேசுவோரை
எதிர்த்து நில்.

துணிச்சலோடு போராடி நில்.
நிச்சயமாய் வெற்றி
உனக்கான களம்.
மேலே ஆகாயம் தொடுமளவு
வந்ததை உணர்வாய்.

எதிரான வார்த்தைகளை
எதிர்கும் அளவு துணிவை
உருவாக்கிக் கொள்.

பெண் அடிமை
பேசி உன்னை
தூற்றுவோரை
எதிர்த்து போராடு...
பெண் விடுதலைக்கு ஊன்று
கோலாய் நில்...
என்றும் உன் இலட்சியம் மீது
நம்பிக்கை வைத்துக்கொள்...
மடிந்து போய்
வீழ்ந்து விடாதே...

உன்னை போலானோரை உயர்வான
சொற்களால் உயர்த்தி விடு...
கடுஞ்சொல் பேசும் கயவர்களை
அழித்து விடு...
கடின முயற்சியால் உன் களத்தை
உருவாக்கிக் கொள்...
நம்பிக்கையை நிலை நிறுத்தி நல்
வழியில் போராடு என்றும் வெற்றி
உன் கைவசம்...



கவிச்சிகரம்
**நுஷைபா நஸீர்**
**நிந்தவூர்.**

## இரு தோணியில் கால் வைத்தாற் போல்'

காதல் இழந்த காதலன்
மறு காதலாய்
தன் மாமன் மவளை ஒரு
தலை காதல் செய்தான்.
தனது காதலையும் அவளிடம்
சமர்ப்பித்து அதனை அவள்
ஏற்றுக்கொள்ளும்
மட்டும் போராடினான்,
ஏக்கம் கொண்டான்.

அவளின் நிலையோ
கல்வியோடத்துடனும்,
குடும்ப சூழ்நிலையுடனும்
திண்டாடிக்கொண்டி
ருக்கையில் தன் காதல்
ஒரு பக்கமிருக்க தன்நிலையறியா
அவள் முடிவு சொல்லாமல்
திண்டாடினாள்
அவகாசம் பேணினாள்

காலம் உருள
காதலன் தாய்
அவள் பக்கமிருந்து
ஒரு மணமகளை தேர்ந்தாள்.
மகனிடமும் திண்டாடி ,
துள்ளி சம்மதம் கேட்க!

அவன் யூதன் தாய் ஏக்கமும்,
பதற்றமும் அடைவதை
காண பிடிக்காமல்
மனமாற்றமின்றி சம்மதம்
தெரிவிக்க அச்சமதம் மகனுக்கு
விருப்பா , வெருப்பா
என தெரியா அவள் அம்மணமகளின்
குடும்பத்தாரிடமும் முடிவு கொடுக்க...


இதறிந்த மாமன் மகள்
சொல்வதறியா புன் சிரிப்புடன்
பிரியாவிடை பதிலளிக்க
திண்டாடிய அவன்!

தன் சோகம் யார் அறிவார் என
தன் காதல் யார் அறிவார் என
சோகத்தின் உச்சம்
காதலிலும் பாதி,
தாய் பாசத்திலும் பாதி
அறை,குறை மனதாய்!!

இரு தோணியில்
கால் வைத்தாற் போல் நிலையடைந்து
துடிதுடித்து போக...

செய்வதறியாமல் கேள்விக்குறி
ஆனான்!!!!!!?

**மு.பா. ஸிஹா**



## இன்றைய பொருளாதார நிலை

பஞ்ச நிலைமைதான் இன்று
சகமெங்கும் பேசும் பொருளாயிற்று

பொருளாதார ரீதியில் பாரிய
பாதிப்பு உதவியா!
ஆக்கிரமிக்கும் முயற்சியா!

கையிலிருந்த காசுகள் எல்லாம்
கரைந்து போயிற்று
கடன் கேட்டுப் போனால் பெற்று வருவது
ஏமாற்றம் ஒன்றே மிச்சமாயிற்று

கடன் சுமை நம் நாட்டின்
கழுத்தை நெரிக்க
வருமையினால் நம்மவர்களின்
வயிற்றை அல்லவா நெரிக்கிறது

பொருளாதாரமின்றி வறுமை தொடர
வயிறு காய பசியைப் போக்க
மீண்டும் அகதி ஆகிறார்கள்
மக்கள் இன்று அங்கு

இந்த நிலை தொடருமனால்
நம்மவர்கள் நிலை என்னாகும்?

**நளீர் நூரா ஸஹ்ரின்**
தரம் - 10
அந்நஹார் ம.ம.வி
மூதூர்.



## பெண் என்றால் இழிவாக பேசும் சமூகமடா..!"

மலரே இல்லாத உலகில்
தேனைத் தேடும் வண்டு போல
உரிமை இல்லாத உலகில்
பெண் உலாவுகிறாள்.

பெண்கள் என்றால் ஏன் இழிவாக பார்க்கின்றீர்
சாதிப்பதற்கு வழியில்லை சாதனை படைக்க
வழியில்லை வீட்டிற்குள் சரணடைய
வைக்கின்றீர்.

பெண் என்பவள் சாதிக்க துடிப்பவள் ஆனால்
இச்சமூகம் நீ பெண்தானே சாதிக்க
தேவையில்லை என்று முடக்கின்றீர்கள்.

பெண் அடுப்பங்கரைக்குள் மட்டும் அடுப்பை
ஊத ஏன் கட்டளையிடுகின்றீர்.

ஆண் என்றால் எங்கு வேணும் என்றாலும்
சென்று படிக்கலாம் ஆனால் பெண் என்றால் நீ
பெண் தானே வெட்கம் இல்லை என்று கேள்வி
கேட்கின்றீர்.

ஒவ்வொரு சமூதாயமும் பெண்மையைப் போற்றி
இருந்தால் இச்சமூகத்தில் எத்தனையோ பெண்
விஞ்ஞானி உருவாகிருப்பாள்.

நாங்கள் சாதிக்க வேண்டும் வெறியோடு
எழுகின்றோம்.

ஆனால் பெண் என்ற நாமத்தை வைத்து எழ
விடாமல் தடுக்கின்றீர்.

பெண்ணென்றால் அடிப்பதற்கும் உதைப்பதற்கும்
அடுப்பை ஊதுவதற்கும் பிறந்தவர்கள் அல்ல

பெண் என்பவள் சாதிப்பதற்காக இறைவனால்
படைக்கப்பட்ட அற்புதப் படைப்பு

இச்சமூகம் இப்படி எல்லாம் இழிவாக பார்ப்பதால்தான்
வெறி பிடித்த நாய்களிடம் பெண்கள்
இரையாக்கப்படுகின்றனர்.

உன் பெண் பிள்ளையை தைரியம்
எனும் உரம் ஊட்டி வளர்த்தால்
இன்று நடக்கின்ற கொடுமைகளுக்கு
உன் பிள்ளை இரையாக மாட்டாள்
இரையாக மாற்றத் துடிக்கும்
வெறி பிடித்த நாய்களை இரையாக்கி
விட்டு திரும்புவாள்.

பெண்களுக்கு சமூகத்தில் பயணிப்பதற்கு
வழி இல்லை சமூக ஊடகத்தில்
பயணிப்பதற்கு வழி இல்லை ஏனென்றால்
நீங்கள் தான் அவர்களை உங்கள்
பேச்சுக்கு சரணடைய வைத்து விட்டீர்களே.

பெண் சமூகமே எழுந்து வா
இழிவான பேச்சுக்களை முறியடித்து
பெண் என்று போற்றக்கூடிய
சமூகத்தை உருவாக்கி
நம் கற்பையும் நம் போன்ற
பெண்களின் கற்பையும் காப்பாற்றுவோம்.



**நாகூர் பாத்திமா அஸ்ஷபா**
**ஏறாவூர்.**

உங்கள் கவிதைகளையும்
எமக்கு அனுப்பி வையுங்கள்
**077 166 3140**

# தரமுயர்த்தப்படவேண்டிய மூதூர் பிரதேச சபை



பாயிஸ் ஸலாம்
மூதூர்
2022.08.10

உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கென இலங்கையில் மிக நீண்ட வரலாறு காணப்படுகின்றது. அரச இயந்திரத்தில் மக்களுடன் நேரடியாக இயங்கிவரும் ஓர் இயந்திரமாக இவைகள் செயலாற்றி வருகின்றன. ஒழுங்குமுறைகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகள், பொது சுகாதாரம் மற்றும் சுகாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொது வழிகள் மற்றும் பொதுப்பயன்பாட்டுச் சேவைகள் என இதன் தொழிற்பாடுகள் மிக நீண்ட பட்டியலாக காணப்படுகின்ற அதேநேரம் ஒவ்வொரு உள்ளூராட்சி அதிகார சபைகளும் ஒரு குட்டி இராட்சியமாகவும் அதில் அதிகாரத்தில் உள்ளவர்கள் குருநில மன்னர்களாகவும் தொழிற்படுவது நாம் அனைவரும் அறிந்த விடயமே.

இலங்கையில் மொத்தமாக 335 உள்ளூராட்சி அதிகார சபைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 23 மாநகர சபைகளும் 41 நகர சபைகளும் 271 பிரதேச சபைகளும் உள்ளடங்கியுள்ளது. 1947 ஆம் ஆண்டு மாநகர சபைக் கட்டளைச் சட்டம், 1939 ஆம் ஆண்டின் நகர சபைக் கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபைச் சட்டம் என்பவற்றினூடாக உள்ளூராட்சி அதிகார சபைகளின் முறைமை இயக்கப்பட்டு வருகின்றது. மத்திய அரசினால் கண்காணிக்கப்பட்டு வந்த இவ் அதிகார சபைகள் யாவும் 1987 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த 13 வது திருத்த சட்டத்தினூடாக மாகாண சபைகளின் நேரடிப் பராமரிப்பின் கீழ் அல்லது கண்காணிக்கப்பின் கீழ் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகள் காலத்திற்கு காலம் ஊர்களின் அபிவிருத்தி மற்றும் சனத்தொகை என்பவற்றுடன் சேர்ந்த பல்வேறு காரணிகளை கருத்தில் கொண்டு தரமுயர்த்தப்படுவதும் புதிய சபைகள் உருவாக்கப்படுவதும் வழமையான அரச நடவடிக்கைகளாகும். இந்த நிகழ்ச்சி நிரலின் கீழ் இக்கட்டுரை எழுதும் நாளுக்கு முதல் நாள் அதாவது 2022.08.09 ஆம் நாள் அன்று களுத்துறை, வவுனியா, புத்தளம், திருகோணமலை, மன்னார், அம்பாறை, கேகாலை ஆகிய நகர சபைகள் மாநகர சபைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளது எனவும் அதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மொனராகலை ஆகிய பிரதேச சபைகள் நகர சபைகளாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.


இந்த தரமுயர்த்தலுக்கான ஆவணங்கள் 2017 ஆம் ஆண்டு எல்லை நிர்ணய சபையினால் கோரப்பட்டு சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உரிய மாவட்டங்களுக்கு சென்று பொது மக்கள், அரசியல் பிரமுகர்களின் வேண்டுதல்களை பரிசீலனை செய்து சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையிலேயே தரமுயர்வு இடம் பெற்றுள்ளது.

இதேவேளை நாம் கிழக்கு மாகாணத்தை எடுத்து நோக்குவோமாயின் கிழக்கு மாகாணத்தில் 3 மாநகர சபைகளும் (99 கௌரவ உறுப்பினர்கள்) 5 நகர சபைகளும் (90 கௌரவ உறுப்பினர்கள்) 37 பிரதேச சபைகளும் (690 கௌரவ உறுப்பினர்கள்) உள்ளடங்களாக மொத்தம் 45 உள்ளூராட்சி அதிகார சபைகள் (879 கௌரவ உறுப்பினர்கள்) இயங்கி வருகின்றன. இதில் திருகோணமலை மாவட்டத்தில் எந்த ஒரு சபைகளும் மாநகர சபையாக இல்லாமல் இருந்ததும், அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை தவிர கல்முனை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய மாநகர சபைகள் காணப்பட்டாலும் அம்பாறைக்கென தனியானதொரு மாநகர சபை இல்லாதிருந்ததும் பாரிய குறைபாடாக காணப்பட்டது. அக்குறைபாடானது, தற்போது அரசின் தரமுயர்த்தல் நடவடிக்கையின் போது திருகோணமலை மற்றும் அம்பாறை நகர சபைகள் மாநகர சபைகளாக தரம் உயர்த்தப்பட்டமை தமிழ், சிங்கள மக்களுக்கு அரசு மாபெரும் சேவையினை செய்துள்ளது எனக் கூறலாம்.

நாம் இப்போது மூதூர் பிரதேச பிரதேசசபையினை நகர சபையாக தரமுயர்த்தல் என்ற விடயத்திற்கு வருவோம்.

திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி சபைகளில் திருகோணமலை, கிண்ணியா ஆகிய இரண்டு நகர சபைகளும் 11 பிரதேச சபைகளும் காணப்படுகின்றன. இதில் திருகோணமலை நகர சபையானது மாநகர சபையாக தற்போது தரமுயர்த்தப்பட்டுள்ளதோடு கிண்ணியா அண்மையில் பிரதேச சபையாக இருந்து நகர சபையாக தரமுயர்த்தப்பட்டுள்ளமையால் மாநகர சபைகளின் தரமுயர்த்தல் ஓரளவு திருகோணமலை மாவட்டத்திற்கு ஒரு திருப்தியை தருகின்றது. இதற்காக உழைத்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். இருப்பினும், நகர சபைகள் தரமுயர்த்தலில் மூதூர் பிரதேச சபை மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பிரதேச சபையாக காணப்படுகின்றது.


மூதூர் பிரதேச சபையானது 1934 ம் ஆண்டு Town Council ஆக ஆரம்பிக்கப்பட்டு தற்போது 1987 ஆம் ஆண்டு 15ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் இயங்கி வருகின்ற ஒரு பிரதேச சபையாகும். மூதூர் பிரதேச சபையின் எல்லைகள், கிழக்கில் நல்லூர் வரையும் தெற்கில் கிளிவெட்டி வரையும் மேற்கில் மகாவலி கங்கை வரையும் சுமார் 195 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் (திருகோணமலை மாவட்டம் 2727 சதுர கிலோமீட்டர் பரப்பளவு) கொண்டு காணப்படுவதுடன் 05 (சம்பூர், கட்டைபறிச்சான், மல்லிகைதீவு, தோப்பூர் மற்றும் கிளிவெட்டி) உப அலுவலகங்களையும் கொண்டு காணப்படுகின்றது. மூதூர் பிரதேச சபையானது 22,425 குடும்பத்தைச் சேர்ந்த 75,958 (2020) சனத்தொகையை கொண்டமைந்துள்ளது. இதில் 46,856 (61.69%) இஸ்லாமியர்களும் 25,325 (25.33%) இந்துக்களும் 2,670 (3.52%) கிறிஸ்த்தவர்களும் 908 (1.24%) பறங்கியர்களும் 197 (0.26%) பௌத்தர்களும் அடங்குகின்றனர். இச்சபையின் எல்லைக்குள் மூதூர், சம்பூர், தோப்பூர் எனும் பிரதான நகரங்களை உள்ளடக்கிய 03 கண்டங்கள் பற்றி பொதுவாக எல்லோராலும் பேசப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.







# கர்ப்பகால உளவியல்



**Sameem Kansul Fazeen**
MSc(R), BTech(Hons)
Iqbal Road.

ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் கருத்தரித்த காலகட்டம்தான் மிக சந்தோஷமான காலமாக கருதப்படுகின்றது. கர்ப்பகாலத்தில் உடலில் மாற்றங்கள் ஏற்படுவது எந்தளவிற்கு உண்மையோ அதே அளவு உளவியல் மாற்றங்கள் நிகழ்வதும் சாதரணம்தான் என்றாலும், சிலர் அந்த மாற்றங்களைக் கண்டு திகைப்படைகிறார்கள். சிலர் பயப்படுகிறார்கள். சிலர் எதுவும் புரியாமல் விழிக்கிறார்கள். இன்னும் சிலருக்கு அந்த மாற்றங்கள் மேல் எரிச்சலோ, வெறுப்போ எழும்.

மன அழுத்தம் என்பது பல்வேறு பாதகமான காரணிகளின் (உடல் அல்லது உளவியல்) தாக்கத்திற்கு உடலின் எதிர்வினை. கர்ப்ப காலம் குறுகிய காலமாக இருப்பதால், இது ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தாது மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றமடையக்கூடியது, ஆனால் இந்த நிலை தாமதமாக அல்லது சரியான நேரத்தில் கவனத்திற்கொள்ளாவிட்டால், எதிர்மறையான விளைவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். கர்ப்பத்தின் ஆரம்ப கட்டங்களில் மன அழுத்தம் குறிப்பாக ஆபத்தானது.

அதே போல் ஒரு குழந்தையைத் தாங்கும் காலம் முழுவதும் எதிர்பார்ப்புள்ள தாய் வெளிப்படும் அதிகரித்த மனோ-உணர்ச்சி மற்றும் மனஅழுத்தம், பெண் மற்றும் கருவின் ஆரோக்கியம் தொடர்பில் பல்வேறுபட்ட சிக்கல்களை ஏற்படுத்தும். எனவே, அனைத்து கர்ப்பிணிப் பெண்களும் மன அழுத்தத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்.

**ஆபத்து :**

மனித உடலில் மன அழுத்தத்திற்கு பதிலளிக்கும் விதமாக, சிறப்பு ஹார்மோன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன - Glucocorticoid. ஒரு கர்ப்பிணிப் பெண்ணின் இரத்தத்தில் இந்த hormone செறிவு அடிக்கடி அதிகரிப்பதன் விளைவாக நஞ்சுக்கொடியின் நோய்க்குறியியல் மற்றும் குழந்தையின் வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்த வல்லவை. மேலும் கருவுற்ற ஒரு பெண் அனுபவிக்கும் மன அழுத்தத்தின் ஆபத்தின் அளவானது ஒரு பெண்ணின் கர்ப்பகால வயதைப் பொறுத்தது.

கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களில், வலுவான உணர்வுகள் விரும்பத்தகாதவை. இது கருச்சிதைவுக்கு வழிவகுக்கும் அல்லது கருவின் மாக்ஸில்லோஃபேஷியல் (maxillofacial) முரண்பாடுகளை உருவாக்கலாம் (பிளவு மென்மையான மற்றும் கடினமான பின்னைய கட்டங்களில், சில சமயங்களில் தாயின் மனோ-உணர்ச்சி அழுத்தத்தின் காரணமாக தொப்புள் கொடியுடன் தொடர்புடைய பல சிக்கல்கள் ஏற்படலாம்.

மேலும், எதிர்பார்ப்புள்ள தாய் அனுபவிக்கும் மன அழுத்தத்தின் விளைவாக, குழந்தை எதிர்காலத்தில் ஸ்கிசோஃப்ரினியாவை (schizophrenia) போன்ற உளவியல் பிரச்சனைகள் உருவாக்கும் அபாயம் உருவாகும் சாத்தியமும் அதிகரிக்கிறது, மேலும் நோயெதிர்ப்பு மையமும் பாதிக்கப்படுகிறது. நஞ்சுக்கொடியின் செயல்பாட்டில் இடையூறு, மற்றும் கருவின் கருப்பையக வளர்ச்சியும் பின்தங்கியிருக்கும்.

**முதல் மூன்று மாதம்(உடலியல் மாற்றங்கள்)**

- பதினான்கு வாரங்கள் வரை எந்த நேரத்திலும் (காலையில் மட்டுமல்ல) அடிக்கடி குமட்டல் மற்றும் வாந்தியின் உணர்வு ஏற்படலாம். இதற்கு மாறும் ஹார்மோன்களே காரணம்.
- மார்பகத்தை தாய்ப்பால் கொடுக்கத் தயார் செய்வதற்காக நேரிடும் ஹார்மோன் மாறுதல்கள் காரணமாக மார்பகம் வீங்குகிறது. மிருதுவாகிறது.
- கர்ப்பகாலத்தில் ஏற்படும் உடல், மன மாற்றங்கள் மூக்கினுளிருக்கும் லைனிங்கில் கூடுதலான அழுத்தம் இருப்பதால் மூக்கடைப்பு ஏற்படுகிறது. இது கர்ப்பப்பையினுள் உள்ள லைனிங் போலவே உள்ளது. கருத்தரிப்பினால் இரண்டிலும் அதிகமான இரத்த ஓட்டம் இருக்கிறது.
- அதிகமான சோர்வை அதிகபட்ச பெண்கள் உணர்கிறார்கள். இதற்குக் காரணம் ஒரு குழந்தைக்கு வடிவம் கொடுக்க உங்கள் உடல் அதிக அளவு சக்தியை உபயோகிக்கிறது.
- அடிக்கடி சிறுநீர் கழிப்பிற்குக் காரணம் கர்ப்பப்பை வளர்ந்து, சிறுநீரகப்பையை அழுத்துவதுதான்.
- மார்னிங் சிக்னெஸ் உள்ள பெண்கள் மாவு சத்துள்ள உணவுப் பண்டங்களுக்காக சில சமயம் ஏங்குகின்றனர். ஏனெனில் மாவுச் சத்து குமட்டலை அடக்க உதவுகிறது.
- கருத்தரித்த நிலையின் மாஸ்க் என்பது கன்னத்திலும் மூக்கிலும் ஆங்காங்கே காணப்படும். இந்த அனுபவம் எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. பிரசவத்திற்கு பிறகு இது மறைந்துவிடுகிறது. இதற்கு ஹார்மோன்களின் மாற்றங்கள் மற்றும் சூரிய ஒளியே காரணம்.

**இரண்டாவது மூன்று மாதம்**

- முதல் மூன்று மாத கால அசௌகரியங்கள் மறைந்தவுடன் ஒரு மொத்த ஆரோக்கியமான உணர்வு திரும்புகிறது.
- இடுப்பு தடிப்பாகிறது. அடிவயிறு ரவுண்டாகவும் உறுதியாகவும் ஆகிறது.
- நெஞ்சில் எரிப்பு அதிகரிக்கிறது. இதற்குக் காரணம், கர்ப்பப் பை வளரும்போது, வயிற்றை அழுத்தி, உணவு செல்லும் குழாயைக் குறிக்கிறது. வயிற்றில் அமிலமும் அதிகமாக உற்பத்தியாகிறது.
- கர்ப்பப் பை குடல்கள் மீது அழுத்துவதால், உணவின் போக்கு குறைகிறது. வைட்டமின் மற்றும் இரும்புச் சத்து அதிகமாக உட்கொள்வதால் மலச்சிக்கல் ஏற்படுகிறது.
- மார்பகம் மற்றும் அடிவயிற்றின் மீது தழும்புகள் ஏற்படுகின்றன. அரிப்பு, சருமம் ஸ்ட்ரெச் ஆவதால் ஏற்படுகிறது.
- சாதாரண பிக்மெண்டின் மாறுதல்களின் ஒரு பங்காக முலைக்காம்பைச் சுற்றியுள்ள சருமம் கருமையாகிறது. தொப்புள் வரை அல்லது அதற்கு மேலேயும் ஒரு மெல்லிய கருமை ரேகை வருகிறது.
- குழந்தையின் அசைவு யாரோ லேசாகக் குத்துவதைப் போலிருக்கும்.
- உணவுக்காக ஏக்கம் இதில் எழும். நெஞ்செரிச்சலை அடக்க எலுமிச்சை வகைப் பழங்கள் நல்லது. முக்கியமாக உப்பைக் குறைப்பது முக்கியம்

**மூன்றாவது மூன்று மாதம்**

- முதுகுக்கு ஆதரவளிக்கும் தசைநார் மற்றும் தசைகள் மீது அதிகமாக அழுத்தமிருப்பதால் முதுகுவலி ஏற்படுகிறது.
- கீழே படுத்துக் கொள்வதால் காலில் இழுப்பு வருகிறது. மேலும் உடலில் இரத்தத்தின் கொள்ளளவு அதிகரிக்கிறது. ஈர்ப்பு காரணமாக இரத்தம் கால்களுக்குச் செல்கிறது. ஆகையால், தசைகள் மீது அழுத்தம் ஏற்பட்டு, கால்களில் இழுப்பு வருகிறது.
- மூச்சுத் திணறல் ஏற்படுவதற்கு காரணம், குழந்தை உதரவிதானம் மீது அழுத்துகிறது. சுவாசப் பை விரிந்து கொடுப்பதில்லை மற்றும் உங்களுக்கு வேண்டிய அளவு வாயு கிடைப்பதில்லை.
- குழந்தையின் அசைவைக் காண முடிகிறது. இப்போது குழந்தையின் எடை கூடுகிறது மற்றும் அதன் உதையையும், விக்கலையும் கூட உணர முடிகிறது.
- உறங்குவதில் கடினமாக இருக்கும். இதற்கு காரணம் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய தேவை மற்றும் எடை அதிகரிப்பினால் ஏற்படும் அசௌகரியங்களாகும்.

## சித்திரை பெருநாள் கொண்டாட்ட நிகழ்வு




**க**ங்குவேலி பிரதேச திருக்கரைசை விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் சித்திரை பெருநாளை முன்னிட்டு பொது மக்களுக்கான விளையாட்டு நிகழ்வும், கலை விழாவும் இன்று (15) கங்குவேலி பாடசாலை மைதானத்தில் திருக்கரைசை விளையாட்டு கழகத்தின் தலைவர் எஸ். கோணேஸ்பரன் அவர்களின் தலைமை யில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலக SO எம்.ஹரீஸ் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## மூதூர் தள வைத்தியசாலை சுகாதார உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்பு போராட்டம்




**மூ**தூர் தள வைத்தியசாலை A தரம் அடைந்தும் அதற்கான வசதிகள், மருத்துவ சேவைக்கான மருந்துகள், உபகரணங்கள் தொடர்பில் நிலவும் பற்றாக்குறைக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை இன்று (05) வைத்தி யசாலை முன்பாக சுகாதார உத்தி யோகத்தர்கள் மற்றும் வைத்தியர்கள் இணைந்து நடாத்தியிருந்தனர். இதன் போது A தரம் தொடர்பில் நிலவும் முக்கிய குறைபாடுகள் பற்றாக்குறை நிலவும் மருந்துகள் தொடர்பிலான விழிப்புணர்வு பதாதைகள் ஏந்திய வண்ணம் தங்கள் எதிர்ப்புகளை வெளிப் படுத்தியதை படத்தில் அவதானிக்கலாம்.

## மூதூர் பழீலிய்யா மகளிர் அரபிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா




**மூ**தூர் பழீலிய்யா அரபிக் கல்லூரியின் 2022ம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா கடந்த (01.04.2022) கல்லூரியின் தலைவர் ஜனாப் முஸம்மில் ஹாஜியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் அவர்களோடு தவிசாளர் எம்.ஏ. அரூஸ், பிரதேச சபை உறுப்பினர் ஐ. வஹ்ஜீத், பெரியபள்ளி நிர்வாக தலைவர் எம்.எம்.ரபீக், அவர்களும் கலந்து கொண்டு சான்றிதழ்கள் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## விசேட பொதுச்சபை கூட்டம்



**மூ**தூர் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுச்சபை கூட்டத்தின் விசேட கூட்டம் கடந்த சனிக்கிழமை (02) மூதூர் பேர்ல் கிராண்ட் மண்டபத்தில் பல்நோக்கு கூட்டுறவு சங்க தலைவர் வி.எம்.நஹீப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 28 கிளை நிலையங்களை சேர்ந்த பொதுச்சபை உறுப்பினர்கள் பெரும்பாலானோர் கலந்து சிறப்பித்த தோடு விருந்தினராக மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலக உத்தி யோகத்தர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் கவனயீர்ப்புப் போராட்டம்



**மூ**தூரில் இடம்பெற்ற நாட்டின் பொரு ளாதார வீழ்ச்சிக்கு எதிராகவும், மக்களின் வாழ்க்கை நிலைமை கேள்விக்குரியாகி யுள்ளமைக்கு எதிராகவும் கவனயீர்ப்பு போராட்டம் மூதூர் பிரதான வீதியில் பொது மக்களின் பங்குபற்றுதலோடு மாலை 4.30 - 5.00 மணிவரை இடம்பெற்றது.

இதன்போது பொதுமக்கள் விலைவாசி அதிகரிப்பு, அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடுகள், எரிபொருட்களின் பற்றாக் குறை தொடர்பிலான விழிப்புணர்வு பதாதை களை ஏந்தியவண்ணம் கவனயீர்ப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடாத்தினர்.

## பெரியவெள்ளி பெருநாள் கொண்டாட்டம்




**பு**னித இயேசு கிறிஸ்து அவர்களின் மீள் உயிர்தெழுகை நினைவை முன்னிட்டு கொண்டாடும் பெரிய வெள்ளிக்கிழமை பெருநாள் இன்று மூதூர் பிரதேச கிருஸ்தவ சமயத்தவர்களினால் விசேடமாக சமய அனுஷ்டானங்களுடன் தேவாலயங்களில் கொண்டாடப்பட்டது. இதன்போது இயேசு கிறிஸ்து அவர்களின் வரலாற்று சிறப்புகள் குறித்து அருட்தந்தை அவர்களினால் சொற்பொழிவுகளும், ஆராதனைகளும் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் வெசாக் கொண்டாட்டம்




**பௌ**த்தர்களின் வெசாக் பெருநாள் கொண்டாட்டம் இன்று மூதூரிலும் கொண் டாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மூதூர் பிரதான வீதிகளில் வெசாக் கூடுகள் கட்டப்படும் அலங்காரம் செய்யப்பட்ட தோடு இன்றைய தினம் மூதூர் பன்சாலையில் மூதூர் வாழ் சிங்கள மக்கள் விசேட பிரார்த் தனைகளை மேற்கொண்டு, தன்சல் அன்னதான செயற்பாடுகளையும் செய்தமை குறிப்பி டத்தக்கது.

## சிறு பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு

**க**ரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பயிர்ச்செய்கை அபிவிருத்தி சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேன்பாட்டு இராஜாங்க அமைச்சினால் Development of Export Agri Zone logis எனும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மூதூர் பிரதேச செயலகத்திற்கு கடந்த 09.05.2022 ம் திகதி 4000 மாமரக் கன்றுகள் வழங் கப்பட்டு அவை இன்று 12.05.2022 பிரதேச செயலாளர் எம். பீ. எம். முபாறக் அவர்களின் தலைமையில் உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.



## நவீன முறைப்படுத்தப்பட்ட கட்டடங்கள்



மூதூர் தள வைத்தியசாலையில் நவீன முறையில் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் புனர்நிர்மானம் செய்யப்பட்ட இயன் மருத்துவ கட்டிடம், மருத்துவ ஆய்வுகூட கட்டிடம் மற்றும் புதிதாக நிர்மாணிக் கப்பட்ட வாகன நுழைவாயில் என்பனவும் இன்று (21) காலை மூதூர் தள வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் அவர்களின் தலைமையில் பொதுமக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

## ஸ்ரீ பத்தினி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்




மூதூர் ஆனைச்சேனை ஆலய வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பத்தினி அம்மன் ஆலய புனராவர்த்தன பிரிதிஷ்டா மஹா கும்பாபி ஷேகத் திற்கான நிகழ்வுகள் நேற்று 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு திங்கட்கிழமை 11 ஆம் திகதி மஹா கும்பாபிஷேக நிகழ்வுடன் நிறைவு பெறுகின்றது. மேலும் கும்பா பிஷேக நிகழ்வை தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றது.

## OBA தெரிவுக்குழுக் கூட்டம்




தி. மூ.அல்ஹிதாயா மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் புதிய நிர்வாக சபை தெரிவும் பாடசாலையின் அதிபர் எஸ்.மஜூன் அவர்களின் தலைமையில் 2022.08.06 ஆம் திகதி மாலை 4.30க்கு ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் தற்போதைய வளர்ச்சி எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றை வெற்றி கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் பல்வேறு ஆக்கப்பூர்வமான கருத்து பரிமாறல் களும் இடம்பெற்றது.

## FFSL President's Gold & Silver Cup 2022




இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத் தினால் முழு அனுசரணையுடன் மூதூர் உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுங்கு படுத்தலில் நடாத்தப்படும் Gold and Silver சுற்றுத்தொடரின் Gold இறுதிப் போட்டியில் ரேன்ஜஸ் மற்றும் ரியல் இஸ்டர் அணிகள் மோதிக் கொண்டன. இப்போட்டியில் ரியல் ஸ்டார் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. மேலும் நேற்று முன்தினம் நடைபெற்ற Silver கிண்ண சுற்றுத் தொடரில் நூரானியா மற்றும் விக்டேரி அணிகளில் விக்டேரி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## நாவலப்பிட்டிய வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு மூதூர் மக்களினால் நிதி அன்பளிப்பு




கடந்த சில வாரங்களாக மத்திய மலை நாட்டில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டு கல்வி, பொருளாதார, வாழ்வாதார வசதி களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியி ருக்கும் நாவலப்பிட்டிய மக்களுக்கு மூதூர் சமூகம் சார்பில் உதவிக் கரம் நீட்டும் நோக்குடன் மூதூர் மஜ்லிஷூஸ் ஷூறா, அனைத்து பள்ளிவாசல் சம்மேளனம் மற்றும் மூதூர் அனர்த்த உதவி மையம் ஆகிய அமைப்புகளின் மேற் பார்வை மற்றும் ஒருங்கிணைப்பில் மூதூர் மக்கள் மற்றும் சமூக அமைப்பு களின் நிதிப் பங்களிப்புடன் கடந்த சில நாட் களாக திரட்டப்பட்ட (1164,360/=) ரூபா வினை கடந்த 21.08.2022 திகதி இன்று ஞாயிற்றுக் கிழமை மூதூர் மக்கள் சார்பில் நேரடியாக சென்று நாவலப்பிட்டிய அனர்த்த குழுவிடம் கையளிக்கப்பட்டது.

## சிரமதானப் பணியும், வீட்டுத்தோட்ட பயிர்க் கன்றுகள் விநியோகமும்




மூதூர் லயன்ஸ் கழகத்தினால் இன்று கடற்கரை பொழுதுபோக்கு பூங்காவைச் சூழவுள்ள பகுதிகளில் காணப்பட்ட பொலுத்தீன் கழிவுகள் அகற்றும் சிரமதான பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த சிரமதான பணியில் பங்குபற்றிய பிரதேசத்தை சார்ந்த 30 குடும்பங் களுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்க்கன்றுகள் அன்பளிப்பு செய்யப்பட்டதோடு தி.மூ. ஹக்கீம் வித்தியாலயத்திற்கு அப்பாடசாலை அதிபர் ஜனாப் எஸ்.ஏ.ரியால் அவர்களுக்கு நெடுங்கால மரக்கன்றுகளும் அன்பளிப்பு செய்யப்பட்டன.

## மின் பிறப்பாக்கி கொள்வனவு

மூதூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான Cypetco எரிபொருள் நிலை யத்திற்கு இன்று Generator கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மிக நீண்டகால மக்களின் அபிலா சைக்கும் தேவைக்கும் விடையளிக்கும் வகையில் மூதூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம் மேற் கொண்டுள்ள இந்த காத்தி ரமான நடவடிக்கைக்கு மூதூர் பல நோக்கு கூட்டுறவு சங்க நிர்வாக சபை, இயக்குனர் சபை, பொது முகாமை யாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தி யோகத்தர் மற்றும் தலைவர் வி.எம்.நஹீப் அவர்களுக்கு மூதூர் மக்கள் சார்பிலான நன்றிகளை தெரிவிக்கின்றோம்.



## திருக்கரைசையம்பதி கங்குவேலி ஆதிசிவன் தேவஸ்தான வருடாந்த ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவ விஞ்ஞாபனம்



வரலாற்று சிறப்புமிக்க கங்குவேலி ஆதிசிவன் தீர்த்தோற்ஸவம் இவ்வருடமும் கடந்த (27,28) மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பக்தர்கள் தீ மிதிப்பு, காவடி மற்றும் பல நேர்த்திக்கடன்கள் நிறைவு செய்ததோடு அடியார்களுக்கு ஆதி சிவனின் அருள்கலாட்சியம் கிடைக்க வேண்டும் என்று சரவணன் வைபோகத்தில் இருந்து வேண்டிக் கொள்ளப்பட்டது.

# Dry Fish Association Football league 2022

மூதூர் Dry Fish Association அனுசரணையில் இம்மாதம் இடம்பெற்ற DFA Football league 2022 சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி நேற்று மாலை 4.30 மணி அளவில் மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ்விறுதிப் போட்டியில் ஈராக் விளையாட்டு கலக்கம் மற்றும் யங் லயன் விளையாட்டு கலகம் மோதிக்கொண்டதில் கோல் ஏதும் பெறப்படாமல் போட்டி சமநிலையில் நிறைவுற்றது. இறுதியாக பெனால்டி முறையின் மூலமாக யங் லயன் விளையாட்டு கலகம் DFA Football league 2022 சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்து வெற்றியை நிலைநாட்டியது.

DFA Football league 2022 சுற்றுத்தொடரானது மூதூரில் இயங்கும் 19 னுசல குளைா உற்பத்தி நிலையங்களை உள்ளடக்கியதாக கடந்த 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் தலைவராக உமர் ஜவாத் அவர்களின் ஒருங்கிணைப்புடன் Dry Fish Association மூலமாக மூதூரில் பல்வேறு சமூகநலன்சார் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சியாக 2022 ஆம் ஆண்டுக்கான DFA Football சுற்றுத்தொடர் 500,000.00 ரூபா தொகையுடன் மாபெரும் காற்பந்து சுற்றுப்போட்டியாக நடைபெற்றமை விசேட அம்சமாகும்.











## Dr. YSM. ZIYA வெற்றிக் கிண்ணத்தை மூதூர் இளம்பிறை அணி சுவீகரிப்பு



மூதூர் கிரிக்கட் சங்கம் (MCA) இனால் தேசிய காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் Dr.ஸியா அவர்களின் பூர்வாங்க அனுசரனையில் MCC மைதானத்தில் கடந்த (19.08.2022) அன்று நடைபெற்ற *Dr.Ziya Champions T20Trophy -2022* இறுதிப் போட்டியில் பலம் பொருந்திய மூதூர் வெஸ்டர்ன் வாரியர்ஸ் அணியினை வெற்றிகொண்டு இளம்பிறை அணி முதற் தடவையாக வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.



விளையாட்டு



## FFSL President's Gold & Silver Cup 2022

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளத்தினால் முழு அனுசரணையுடன் மூதூர் உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுங்குபடுத்தலில் நடாத்தப்படும் புழடன யனெ ஏடைஎநச சுற்றுத்தொடரின் புழடன இறுதிப்போட்டியில் ரேன்ஜஸ் மற்றும் ரியல் இஸ்டர் அணிகள் மோதிக்கொண்டன. இப்போட்டியில் ரியல் இஸ்டர் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. மேலும் நேற்று முன்தினம் நடைபெற்ற ஏடைஎநச கிண்ண சுற்றுத்தொடரில் நூரானியா மற்றும் விக்டேரி அணிகளில் விக்டேரி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளன தலைவர் ஜஸ்வர் உமர் மற்றும் கௌரவ அதிதியாக தவிசாளர் எம்.ஏ.அரூஸ் என்பவர்களோடு ஏ.எஸ்.பி நிசங்க கொடமுன அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.












அன்பார்ந்தூபதுக்கல்ூபெருமக்களே!!


கடந்த சில மாதங்களாக கால்கள் கடுக்க கடுக்க போலினில் நின்று, தூக்கம் பல நாள் தொலைத்து நீங்கள் பதுக்கிய பெற்றோலை எகிறும் விலையில் விற்பனை செய்துவருவது ஊரெல்லாம் அறிந்த இழி செய்தியாகும். இறக்குமதி செய்த பெற்றோலை வெளியூர்கள் பலவற்றுக்கு நிர்ணயமற்ற, நிபந்தனையற்ற, ஸ்தீரனமற்ற விலைகளில் நீங்கள் ஏற்றுமதி செய்யும் கைங்கரியம் இருக்கிறதே அது ஓர் அனாச்சாரம்.

நீங்கள் அநியாயமாக, அலட்சியமாக விற்பனை செய்வது பெற்றோல் என்ற திரவத்தை மட்டுமல்ல நமது மார்க்கத்தின் மாண்புகளை, உங்களது வாழ்வின் பரகத்தை, உங்களது மனசாட்சியை, உங்கள் மீதான நன்மதிப்பை, உங்கள் குடும்பத்தின் நோயற்ற வாழ்வை என்பதை உணரமாட்டீர்களா????

உங்களிடம் கெஞ்சி, உங்களைக் கொஞ்சி பெற்றோல் பெற்ற அனைவரும் உங்களுக்கு லீற்றர் கணக்கில் விடும் சாபங்கள், உங்கள் காதுகள் இன்னமும் எட்டவில்லையா???

பெருந்தகைகளே பெருச்சாளிகளே, 69 இலட்சம் பேரின் ஆசிகளுடன் அரியாசணம் ஏறியவனே, இன்று அயல்நாட்டு வீதிகளில் முகம் காட்டக்கூட திராணியில்லாமல் விரண்டோடிக்கொண்டிருக்கிறான். அவனுக்கே இந்த சாபக்கேடு என்றால் சாதாரண நமக்கு ஒரு நோய் வந்துவிட்டால் போதும் பதுக்கலால் உழைத்த அத்தனை பணமும் ஒரு நொடியில் கரைந்துபோய்விடும் என்பதை ஒரு கணமும் நீங்கள் சிந்தித்துப் பார்த்தில்லையா?

நீங்கள் இத்தனை நாட்களும் செய்த பதுக்கல் பணிக்கு நாம் சிரம் சாய்க்கிறோம். இனியாவது நீங்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளக் கூடாதா ? அவசியமானவர்கள் வந்து அவர்களின் தேவைகளை தாமாகவே நிவர்த்தி செய்துகொள்வார்கள்.




தி/மூ/அல்-ஹம்றா தேசிய பாடசாலையின் OBA,SDEC புதிய குழுவின் ஒன்று கூடல்.

கல்வியின் ஊடாகவும் ஏனைய இணைப் பாடவிதான செயற்பாடுகள் ஊடாகவும் முன்னேறி வருகின்ற தி/மூ அல் ஹம்றா மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் இணைந்து எதிர் காலத்தில் எவ்வாறு இன்னும் முன்னேற்ற முடியும் .என்பது சம்பந்தமாக கலந்தாலோசனை முதலாவது ஒன்றுகூடல் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் குறிப்பாக க. பொ. த சாதாரண தரம், க. பொ. த. உயர் தர அரச பரீட்சையில் அடைவு மட்டத்தை அதிகரிப்பது தொடர்பாகவும், பாடசாலையின் பௌதீக வளத்தை மேலும் அழகுபடுத்துவது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டன.

இக் குழுவில் பல்வேறு அமைப்புகளில் உள்ள சமூக சிந்தனை கொண்ட பெற்றார் மற்றும் நலன் விரும்பிகள் இணைந்திருப்பது இப்பாடசாலை உயர்ந்து செல்ல வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

"மாற்றத்தை நோக்கி HAMRIAN "




கல்விப்புலத்தில் பணியாற்றியோரை கௌரவித்தல் - 2022.08.01



"ஓய்வுநிலை கல்வியியலாளர்களை கௌரவித்தல்" எனும் கருப்பொருளில் மாணவ சமூகத்திற்கு கல்வியலாளர்களை கௌரவிக்கும் மனப்பாங்கை வளர்க்கும் நோக்கிலும் முன்மாதிரிகளை மாணவ சமூகத்திற்கு வழிப்படுத்தும் நோக்கிலும் வாராந்த காலை ஆராதனை நிகழ்வில் கல்வியலாளர்களை கௌரவிக்க அதிபர், ஆசிரியர்களினால் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய மூதூரின் கல்வி வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றி கல்விப் பணியில் தடம்பதித்து தற்போது ஓய்வு நிலையில் உள்ள கல்வியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் இந்த வாரம் ஆசிரிய ஆலோசகராகவும், எமது பாடசாலையின் EPSI இணைப்பாளராகவும் இருந்து சேவையாற்றி ஓய்வு பெற்ற ஜனாப் எம்.ஏ.சி. ஆரிப் அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்லூரியில் அதிபரின் வழிகாட்டலில் நடைபெற்றது. இன்றைய நிகழ்வின்போது கல்வியலாளர் பொன்னாடை அணிவித்து, சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஓய்வுபெற்ற கல்வியலாளரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.




## தாஜ் ஜுவலரி கிண்ணம் 2022

அஸீஸ் விளையாட்டு கழகத்தின் 32வது வருட நிறைவையொட்டி "தாஜ் ஜுவலரி கிண்ணம் 2022" இன் இறுதிப்போட்டி தோப்பூர் அஸ்ரப் பொது விளையாட்டு மைதானத்தில் 9.9.2022 வெள்ளிக்கிழமை தோப்பூர் கிரிகெட் கட்டுப்பாட்டு சபை மற்றும் அஸீஸ் விளையாட்டு கழகத்தின் தலைவருமான ALM.முபீர் தலைமையில் நடைபெற்றது. இவ்விறுதிப் போட்டியில் பாலத்தோப்பூர் - தாருஸ்ஸலாம் ஆகிய அணிகள் இறுதிப் போட்டியில் மோதியதில் பாலத்தோப்பூர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி கிண்ணத்தை சுவீகரித்தது.

இப்போட்டியில் பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் வைத்தியர் எஸ்.எம். ஸியா கலந்து கொண்டதோடு விசேட அதிதியாக தாஜ் ஜூவலரி உரிமையாளர் எம்.எம்.மபாஸ் அவர்களும் கலந்துகொண்டார்.







சவூதி அரேபியா அதன் வடமேற்கு எல்லையில் உள்ள செங்கடலில் தொடங்கி 170KM தூரம் வரை ஒரே நேர்கோட்டில் அமையப்பெரும் வகையில் கண்ணாடி கொண்டு உருவாக்கப்படும் வான ளாவிய கட்டிடங்களைக் கொண்ட ஒரு மெகா சிட்டியை உருவாக்க திட்டமிட்டு இருக்கிறது. 2030ம் ஆண்டு சுமார் 4 இலட்சம் வேலை வாய்ப்புடன், 9 மில்லியன் மக்களை இங்கு குடியமர்த்துவதே பிரதான இலக்கு. ஸீரோ காபன் ரூ சூழல் நேய முறையில் அமையப்போகும் இந்த நகரத்திற்காக சவூதி அரசு ஒரு டிரில்லியன் (ஒரு இலட்சம் கோடி USD) அமேரிக்க டொலரை ஒதுக்கி இருக்கிறது. இது இலங்கை போன்ற பல நாடுகளில் பல ஆண்டுகளுக்கான வருடாந்த பட்ஜெட் ஆகும்.

**குறிப்பு:** இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு அவசரமாக தேவைப்படுவது 5 பில்லியன் டொலர்களே(500 கோடி USD). 1900ம் ஆண்டு காலப்பகுதியில், இன்று இலங்கை எதிர்நோக்கி இருக்கும் இந்த பொருளாதார நெருக்கடி போன்று சவூதியிலும் ஏற்பட்டு, பின்னர் அதன் தாக்கம் காரணமாக மிகவும் மோசமான ஒரு பஞ்சத்தை சவூதி எதிர்கொண்டது. இதன்போது பல நாடுகள் சவூதிக்கு தங்களால் முடிந்த உதவிகளை செய்தனர். அப்போது இலங்கையும் தனது பங்கிற்கு நாடு பூராகவும் வசூல் செய்து 71,000 ரூபாய்களை அனுப்பி இருக்கிறது. இதனை எனது தாய்க்கு அவர்களின் தந்தை சொன்னதாக ஒருமுறை சொன்னார். பின்னர் இத்தகவலை இன்னும் சிலரிடம் உறுதிப் படுத்த முடிந்தது.

**முகநூல் முற்றத்துவெளியில் உங்கள் Facebook ஆக்கங்களும் இடம்பெற விரும்புகின்றீர்களா...?**

**#Muththithal #mmv/fb**

**என்று #(Hastag) செய்யவும்.**



**மேலதிகத் தொடர்புகளுக்கு : Muththithal முத்திதழ் என்ற fb Page ஐ நாடவும்**

facebook

## கர்ப்பகால உளவியல்...

- இவற்றையெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டவர்களுக்கு இந்த மாற்றங்கள் விரும்பத்தக்கவையாக இருக்கும். ஒரு ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க மனம் தயாராகிவிட்ட உணர்வு எழும். தாயாகப்போகும் நாளை எதிர்பார்த்துக்கொண்டு இருப்பீர்கள் இவ்வாறு உடல் , உள் ரீதியில் பல சவால்களை எதிர்நோக்கும் கர்ப்பிணிப் பெண்களை கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்வது கணவன் மட்டுமன்றி ஒட்டுமொத்த குடும்பத்தின் தலையாய கடமையாகும். அவர்கள் மீதான உங்கள் அணுகுமுறையை மாற்ற முயற்சிக்க வேண்டும். உளவியலாளர்கள் பரிந்துரைக்கும் முதல் விஷயம், எதிர்மறையை ஏற்படுத்தும் காரணங்களின் பட்டியலை உருவாக்கி அதைத் தீர்ப்பதற்கான வழிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

**கூடுதலாக, வல்லுநர்கள் பின்வரும் விதிகளை கடைபிடிக்க அறிவுறுத்துகிறார்கள்:**

- நேர்மறையான நபர்களுடன் அதிகம் தொடர்புகளை பேணவேண்டும்.
- பிடித்தமான பொழுதுபோக்கு ஒன்றில் ஈடுபடல் வேண்டும்.
- உடற்பயிற்சியில் ஈடுபடல் (லேசான உடற்பயிற்சி)
- நடக்க நிறைய நேரம் செலவிடல்
- போதுமான அளவு உறங்குதல்
- ஆரோக்கியமான உணவுப்பழக்கவழக்கங்களை கடைப் பிடித்தல்.

அதேபோல் தாயாகத் தயாராகும் ஒரு பெண் குழந்தையின் வாழ்க்கைக்கான தனது பொறுப்பை அறிந்திருக்க வேண்டும். கர்ப்ப காலத்தில் மன அழுத்தத்தைத் தவிர்ப்பதன் மூலமும், தேவையற்ற கவலைகளை சரியான நேரத்தில் அகற்றுவதன் மூலமும், உங்கள் குழந்தையைப் பாதுகாப்பதோடு உங்கள் ஆரோக்கியத்தைப் பேணுவதும் முக்கியமானதாகும்.

1. உங்கள் அச்சங்களை வெல்லுங்கள். மன அழுத்தத்திற்கான காரணம் குழந்தைக்கு பயம் என்றால், அதைப் பற்றி மருத்துவரிடம் சொல்லுங்கள், தேவைப்பட்டால், கூடுதல் பரிசோதனைக்கு உட்படுத்துங்கள். காரணம் வேறு ஏதாவது இருந்தால், அதை அதே வழியில் தீர்க்க முயற்சிக்கவும்.
2. ஒரு பொழுதுபோக்கைக் கண்டுபிடியுங்கள்.ஒரு பொழுது போக்கு கெட்ட எண்ணங்களிலிருந்து திசை திருப்பும் மற்றும் நிறைய நேர்மறையானவற்றைக் கொடுக்கும்.
3. உங்களை மகிழ்விக்க கற்றுக்கொள்ளுங்கள்.நீங்கள் ஏதாவது இனிப்பு சாப்பிட விரும்பினால், மிகவும் சுவையான இனிப்புகளில் ஒன்றைச் சாப்பிடுங்கள். நீங்கள் ஒரு ஊஞ்சலில் சவாரி செய்ய விரும்பினால் - நிறுத்த வேண்டாம், ஏனென்றால் ஒரு குழந்தை உங்களில் வாழ்கிறது.
4. பிரசவ வலி பயத்தை விடுவிக்கவும். அனைவரும் இந்த வலிக்கு பயப்படுகிறார்கள். நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும், உங்கள் மன அழுத்தத்தால் குழந்தையை ஆரோக்கிய குறைவிற்கு உட்படுத்தாதீர்கள்.
5. உங்கள் கர்ப்பத்தை மறைக்க வேண்டாம். கொண்டாடுங்கள்.
6. உங்கள் எல்லா ஆசைகளுக்கும் குரல் கொடுங்கள்.கர்ப்பம் என்பது விருப்பங்கள் மற்றும் விசித்திரமான ஆசைகளின் நேரம், எனவே இந்த தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## எது சுதந்திரம்...

அவ்வாறெனின் என்னதான் செய்ய வேண்டும் என்றால் ஒவ்வொரு தனிநபரில் இருந்தும் தனித்தனி தொழிற்சாலைகள் தோற்றம் பெற வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் தொழிலதிபர்கள் தோற்றம் பெற வேண்டும். ஒவ்வொரு பிரதேசங்களின் வளங்களும் உபயோகிக்கப்பட வேண்டும். தானே தனக்கு முடியுமான வளத்தைப் பயன்படுத்தி ஒரு முயற்சியாளனாக, உற்பத்தியாளனாக மாற வேண்டும். வீட்டுக்கு வீடு ஒருவராவது, ஒரு உற்பத்தியாவது இருந்தாக வேண்டும்.

எம் தேசத்து ஒவ்வொரு பிரஜையுமே சுயசார்பான பொருளாதார முறைமையினுள் தன்னைத் தானே சுழற்சிமுறைக்குள்ளாக்க வேண்டும். தான் ஆரம்பிக்கும் சிறிய முயற்சியின் மறைவில்தான் பெரிய தொழிற்சாலைகள் ஒழிந்து போய்க் கிடக்கின்றது என்பதைப் புரிய வேண்டும்.

## தரமுயர்த்தப்படவேண்டிய மூதூர் பிரதேச சபை...

அத்துடன் ஆடுகள், கோழி, சேவல், நாட்டுக்கோழி முட்டைகள் என்பன இங்கிருந்து வத்தை, லோன்ஞ் மூலம் வெளி ஊர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

மூதூரின் கடல்வளம் மீன்பிடித் தொழிலுக்கு ஏற்றதாக காணப்படுகிறது. ஆழ்கடல் மீன்பிடி 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரபல்யம் பெற்று காணப்பட்டது. பல ஆழ்கடல் மீன்பிடி படகுகள(Tanky Board) காணப்பட்டன. மீன்கள், நண்டு இறால், கருவாடு, மீன் எண்ணெய் என்பன கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அத்துடன் ஏப்ரல் தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் குளங்கள், மடுவுகளில் பிடிக்கப்பட்ட மீன்கள், நெருப்புக் கருவாடு என்பனவற்றுக்கு அதிகம் கிராக்கி காணப்பட்டது.மூதூர் பொதுச் சந்தை மற்றும் மீன்வாடிகள்,கருவாட்டு வாடிகளும் கடலுணவு ஏற்றுமதிக்கு பிரதான பங்களிப்பை வழங்கி வருகின்றன.

ஹபிப் நகர், நடுத் தீவு முந்திரியஞ் சேனை (ஆலிம் நகர் )பிரதேசங்களில் மரமுந்திரிகை பயிரிடப்பட்டன.ஆலிம் நகர், ஜின்னா நகர் பிரதேசங்கள் மாம்பழப் பயிர் செய்கைக்கும், பட்டித்திடல் பிரதேசம் பலாப்பழத்திற்கும், மற்றும் ஏனைய பிரதேசங்கள் தெங்கு உற்பத்திக்கும் உகந்ததாக காணப்பட்டன. இதனை ஒல்லாந்து ஆளுநரும் குறிப்பிட்டுள்ளார்.

மூதூர் பிரதான வீதியில் ஐஸ்பழத் தொழிற்சாலை மூதூர் மத்திய வீதியில் சோடா கம்பெனி,Four Roses பீடி கம்பனி, ஜாயா பீடி கம்பெனி,ஸ்டார் சுருட்டு கம்பெனியும்,இறால்குழியில் பிரம்புத் தொழிற்சாலையும் காணப்பட்டன.

விசேடமாக தரமான தேன் வகைகளும் விற்பனை செய்யப்பட்டன. சேனையூர், சம்பூர், இறால்குழி, அறபா நகர், உப்புக்காச்சிமடு போன்ற பிரதேசங்கள் மரக்கறி பயிர் செய்கைக்கு பிரசித்தி பெற்று காணப்படுகின்றன.

ஆரம்ப காலம் தொட்டு 1985ஆம் ஆண்டு வரை மூதூர் நகரம் பொருளாதாரத்தில் செல்வச் செழிப்புடன் சிறந்து விளங்கியது. 1985 அக்டோபர் 27 ஆம் திகதி மூதூரில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் மிகச் சுதந்திரமாக மூவின மக்கள் மத்தியிலும் பறந்து திரிந்த சமாதானப்புறா மிகத் தொலை தூரத்தில் பறந்து சென்றுவிட்டது. மூதூர் மக்களாகிய நாங்கள் அந்த சமாதானப் புறாவையே இன்றும் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

இந்த நாட்டிலே நடக்கும் போராட்டங்கள் பலதினதும் அடிப்படையாக இருப்பது ஒவ்வொருவரிடமும் உள்ள வறுமையை ஒழிப்பதற்கான வழியை ஏற்படுத்தித் தருமாறு என்ற கோசங்களுடனேயே அமைந்துள்ளன. அடுத்தவரை அடுத்தவர் பார்ப்பதெல்லாம் தன்னுடைய பொருளாதாரப் பின்னடைவு பற்றிய கவலையும், தனக்கு ஏற்படும் ஏழ்மை பற்றிய பயமும்தான் என்பதை நாம் சிந்திக்கத் தவறிப் போயுள்ளோம். ஒவ்வொரு சமூகமும், சமூகத்தின் ஒவ்வொரு தனிநபரும் தனக்கான பொருளாதார முறையொன்றில் நிறைவு காணுகின்ற போது அடுத்தவர் மீது பொறாமைப் படவோ, அடுத்தவர் வளங்களைச் சுரண்டவோ, ஒரு வளத்தை மற்றவர் பயன்படுத்தும் போது அதற்கு தடைகள் ஏற்படுத்தவோ, ஒன்றை அனுபவிப்பதிலிருந்து தூரமாக்கவோ அல்லது பறித்தெடுக்கவோ முயலமாட்டார்கள். சந்தோசமான உள்ளங்களில் இருந்து வன்முறையான ஒரு செயல் மிக அரிதாகவே இடம்பெறலாம். எனவே ஒரு அதிகாரப் பண்பாடொன்று அடியோடு அழிய வேண்டுமானால் ஒவ்வொருவரும் முயற்சியாளராகவும், உற்பத்தியாளராகவும் பொருளாதாரத் தன்னிறைவு காண வேண்டிய தேவை இருக்கிறது.

இந்தத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே எம் வளங்களை விட்டுச் செல்லுமாறு அல்லது விட்டுத் தருமாறு நாமெல்லாம் போராடிப் பெற்ற அந்த சுதந்திரத்தின் அடிப்படை நோக்கமும் ஆகும். அன்றிலிருந்து 74 ஆண்டுகள் கடந்து வந்த எமது தேசம் அந்த நோக்கத்தின் பாதியையாவது செயற்படுத்த முயன்றுள்ளோமா என்பதைவைத்தே எமது சுதந்திரத்தின் ஆயுளைத் தீர்மானிக்கவும் வயதைக் கணிப்பிடவும் முடியும் என்பதை நினைவில் கொள்வோம். இன, மன,மத பேதங்கள் மறந்து நாட்டின் வளங்களின் பேண்தகு தன்மையைப் பேணி நாமும் அவற்றைப் பயன்படுத்தி நமது சந்ததிக்கும் விட்டுக்கொடுத்து சுயசார்பான பொருளாதார முறையொன்றை எல்லோருமாகக் கட்டியெழுப்புவோம். அதுவே மூதாதையர்கள் நமக்குப் பெற்றுத்தந்த சுதந்திரத்திற்கு நாட்டு மக்களாகிய அவர்களின் பிள்ளைகள் செய்யும் மரியாதையாகும்.

# சேவை நலன் பாராட்டும் கௌரவிப்பும்



**ஓய்வு பெற்றுள்ள எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் அல்ஹாஜ். ஏ.எச்.எம்.பஷீர் (SLPS-I)** அவர்களை கௌரவித்து வழியனுப்பும் பிரியா விடை நிகழ்வு!

எமது மூதூர் மத்திய கல்லூரி (தே/பா) ல் சுமார் 08 வருடங்களாக அதிபராக சிறப்பாக சேவை யாற்றி அண்மையில் அரச கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் அல்ஹாஜ்.ஏ.எச்.எம்.பஷீர் (SLPS-I) அவர்களை கௌரவித்து வழியனுப்பும் பிரியாவிடை நிகழ்வு எமது கல்லூரியின் அதிபர் ஜனாப்.S.A.முஹீர் (SLPS-I) அவர்களின் தலைமையிலும் ஆசிரியர்கள்,கல்வி சாரா ஊழியர்கள் மாணவர்களின் ஏற்பாட்டிலும், பெற்றார்கள் மற்றும் பழைய மாணவர்களின் பங்களிப்புடனும் இன்று 25.08.2022ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கௌரவ பிரியாவிடை வைபவத்தில் எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் பஷீர் அவர்களின் குடும்பதினர், உறவினர்கள், பாடசாலை அதிபர், ஆசிரி ஆசிரியைகள், மாணவ மாணவிகள், SDEC, OBA உறுப்பினர்கள், கல்வி சாரா ஊழியர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



மூதூர் முன்னாள் வலயக் கல்வி பணிப்பளராகவும், ஓய்வுபெற்ற கிழக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளராகவும் பணி யாற்றிய திரு.அருளானந்தம் விஜயானந்தமூர்த்தி அவர்களின் சேவையை கௌரவிக்கும் வகையில் மூதூர் கல்வி வலயம் மற்றும் வலய அதிபர் சங்கம் இணைந்து நடாத்திய சேவை நலன் பாராட்டும் நூல் வெளியீடு நிகழ்வு இன்று மூதூர் பேர்ல் கிராண்ட் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திரு.அருளானந்தம் விஜயானந்தமூர்த்தி அவர்களும், அவர்களின் குடும்பத்தாரும் கலந்துகொண்டதோடு தலைமையை வலயக்கல்வி பணிப்பளர் திருமதி முநௌவரா நளீம் ஏற்று வழிநடத்தினார். மேலும் இந்நிகழ்வில் மூதூர் வலயப் பாடசாலை அதிபர்கள், வலயகல்வி பணிமனை அதிகாரிகள் என்று பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.







# ஏழுத்தாளர்களுக்கான செயலமர்வும் பிரதேச சாகித்திய விழாவும்

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட மூதூர், கிண்ணியா, வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குற்பட்ட எழுத்தாளர்களுக்கான ஒன்றுகூடல் செயலமர்வும், பிரதேச சாகித்திய விழாவும் இன்று சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமை விருந்தினராக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் அவர்களும், முதன்மை விருந்தினராக திரு. இரா.இரத்தினசிங்கம் ஓய்வுநிலை அதிபர் அவர்களும் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.அருஸ் அவர்களும், அனாமிகா பண்பாட்டு மைய பணிப்பாளர் பேராசிரியர் பாலசுகுமார் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

மேலும் மூதூர், கிண்ணியா, வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குற்பட்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் என்று பலரும் இந்நிகழ்வில் கலந்து தங்களின் பங்குபற்றுதலையும், கலந்துரையாடலையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மூதூர் வலயம்



2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகளின் பிரகாரம் இம்முறை பல பாடசாலைகளில் இருந்து திருப்திகரமான அடைவுகள் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இம்முறை உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானத் துறைகளின் பெறுபேறுகள் மகிழ்ச்சி அளிக்கின்றன.

மேலும் கிழக்கு மாகாணத்தில் 17 வலயங்களில் மூதூர் வலயம் முதலிடம் பெற்றுள்ளது. அதேவேளை நாடளாவிய ரீதியில் கிழக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்றுள்ளதோடு திருகோணமலை மாவட்டம் கிழக்கு மாகாணத்தில் முதல்நிலையும் இம்முறை பெற்றுள்ளது.

இம்முறை மூதூர் வலயத்தில் 19 உயர்தர பாடசாலைகளில் இருந்து 615 மாணவர்கள் பரீட்சசைக்கு தோற்றி 483 மாணவர்கள் சித்திபெற்றுள்ளார்கள். இவர்களில் உயிரியல் விஞ்ஞானம் - 73%, பௌதீகவியல் விஞ்ஞானம் - 75%, வர்த்தகம் - 88%, உயிரியல் தொழிநுட்பம் - 84%, பொறியியல் தொழிநுட்பம் - 71.43% மற்றும் கலை பிரிவு - 78.68% சித்தியும் கிடைக்கப்பற்றுள்ளன.

சதவீத அடிப்படையில் 2020 ஆண்டிலும் பார்க்க 2021 ஆம் ஆண்டு பெறுபேறு உயிரியல் தொழிநுட்பப் பாடத்தை தவிர்ந்த ஏனைய துறைகள் அனைத்தும் அதீத முன்னேற்றம் கண்டுள்ளமை விசேட அம்சமாகும்.

அத்தோடு வலயத்தில் 3A சித்தி பெற்று 25 மாணவர்களும் இதில் மாவட்ட நிலையில் முதல் நிலை பெற்ற மாணவர்களாக கலைப்பிரிவு மற்றும் பொறியியல் தொழிநுட்ப மாணவர்கள் இருவர் சாதனை நிலை நாட்டியுள்ளனர்.

மாவட்டத்தில் கலை பிரிவில் இம்முறை மூதூர் கிளிவெட்டி பாடசாலையை சேர்ந்த **அருள்ராசா சனுஜா** என்னும் மாணவி முதலாவது நிலையை பெற்று மூதூர் வலயத்திற்கு பெருமை ஈட்டியுள்ளார்.

பாடசாலை ரீதியாக கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேற்றின் அடைவு வீதம் உயர்வை காட்டியுள்ளது. நாட்டில் ஏற்பட்டிருந்த கொரோனா சூழலில் முறையாகத் திட்டமிட்டு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பு செய்த **வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி முனவ்வரா நளீம் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப் எம்.ஸியாத், பிரதிக்கல்வி பணிப்பாளர்களான எஸ்.தாரிக், எம்.எம்.அப்பாஸ் மற்றும் திரு. ஜெயந்தன்** ஆகியோரோடு வலயக்கல்வி அலுவலக உத்தியோகதத்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் இவ்விடத்தில் நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

## க..பொ.த (உ/தர)ப் பரீட்சைப் பெறுபேற்றில் மாகாணத்தில் முதலிடம்



**Mr. K. Raseem**
Principal
T/Mu/Almina M.V



**Mr. ALK. Rahman**
Principal
T/Mu/Althaj M.V



**Mr. K. Harisan**
Principal
T/Mu/Sinhala M.V



**Mr. PMA. Marzook**
Principal
T/Mu/Annaha G.M.V



**Mr. APA. Jabar**
Principal
T/Mu/Fathima M.L.C



**Mr. R.Sachitanandam**
Principal
T/Mu/Senbaha M.V



**Mr. JM. Mahir**
Principal
T/Mu/Mutur M.L.C



**Mr. P. Koneswararasa**
Principal
T/Mu/Kiliveddy M.V



**Mr. V. Mathipalasingam**
Principal
T/Mu/Mallikaiteevu M.V



**Mr. K.Pakiyarajah**
Principal
T/Mu/Kalaimagal H.C



**Mr. S.Kamaleswaran**
Principal
T/Mu/Eruhalampaty HM



**Mr. SM. Faheem**
Principal
T/Mu/Alhambra CC



**Mr. SA. Muheer**
Principal
T/Mu/Mutur C.C



**Mr. S. Majoon**
Principal
T/Mu/Alhitaya M.V



**Mr. S. Thayaparan**
Principal
T/Mu/ETM Hindu C.



**Mr. K.Ganesalingam**
Principal
T/Mu/Senayoor C.C



**Mr. SI. Suhood**
Principal
T/Mu/Alhilal C.C



**Mr. P. Pirabakaran**
Principal
T/Mu/Sampoor M.V



**Mrs. JKP.Thilipkumar**
Principal
T/Mu/st.Anthony's MV

# G.C.E (A/L) Results Analysis - 2022

## T/MU/MUTUR CENTRAL COLLEGE



Ravichsanthiran Thapilashsan
E-Technology - 2AB
District Rank - 02



Nazeer M. Nazik
Bio Science - 2AB
District Rank - 10



Kalas A.Munsif
Commerce-3A
District Rank - 29



Raskeen M.Satheem
Physical Science-2AB
District Rank - 11



Waris F.J. Rahna
Bio Science-A2B
District Rank - 28

## T/MU/KILIVEDDI M.V.



**Arulrasa Sanuja**
Arts - 3A
District Rank - 1



**Palachanthiran Rammiya**
Arts - 3A
District Rank - 27

## T/MU/ALHILAL C.C



**Raseethu M.Atheef**
Physical Science-ABC
District Rank - 25




**Thaslim M.Ashfak**
Arts 3A
District Rank - 19




**Suwaib Insaf Ahamed**
Arts 3A
District Rank - 179


## T/MU/ANNAHAR G.M.V



**Musafeer Fathima Sanha**
Commerce-3A
District Rank - 26




**Najimi Nusna Hanith**
Arts 3A
District Rank - 15




**Naseer Fathima Ifama**
Arts-3A
District Rank - 21


## T/MU/MUTUR MUSLIM LADIES COLLEGE




**Mahir Fathima Riska**
Arts 3A
District Rank - 04




**Thowfeek Hamthi**
Arts 3A
District Rank - 40



**Hilmy F.Rukaiya**
Arts 3A
District Rank - 45




**Najeeth Fathima Riska**
Arts 3A
District Rank - 70




**Naleem Ayisha Beham**
Arts 3A
District Rank - 31



**Naheeb F. Sahana**
Arts 3A
District Rank - 42



**Nawahir R.Shereen**
Arts 3A
District Rank - 63



**Sathath Sathila Roshan**
Arts 3A
District Rank - 114

## T/MU/ALHITAYA M.V




**Latheef M. Lathees**
Arts 3A
District Rank - 69




**Kaleel M. Ringsan**
Arts 3A
District Rank - 35

## T/MU/FATHIMA L.C



**Ansar F. Risna**
Arts 3A
District Rank - 16



**Ismail F. Insifa**
Arts 3A
District Rank - 79

## T/MU/ALHAMRA C.C



**Jalaldeen Imran Nasir**
Arts 3A
District Rank - 37



**Safundeen M. Ilham**
Arts 3A
District Rank - 99

## T/MU/Ilangaturai H.C



**Kankataran Renuka**
Arts 3A
District Rank - 08

## T/T/Zahira College



**Aarif A. Ahamed**
Bio Science 2AB
District Rank - 18


Quality Mart
Modern
Mens Wear &
Kids Wear
Wedding Dress
Collections
EMERALD
LAROUSSE
COSMATICS
MOOSE
VANTAGE
KIDSWARE
BABAYHUG
Quality Mart
வாழ்க்கைக்கோர் புது வடிவம்
N.RIHAN 077 15 444 88 | 075 60 26 304
Quality Mart
Batticaloa Road,Periyapalam,Mutur 05


MODERN CONSTRUCTION
& CONSULTANT (PVT) LTD
TRUST BUILDERS
MODERN PLANNING
3D MODELING
075 75 77685
எமது சேவைகள்
அனைத்து வகையான கட்டடங்களும் நிர்மாணிக்கப்படும்
முப்பரிமான, உட்புற வடிவமைப்பு
கட்டடக்கலை, கட்டமைப்பு வரைபடம்
திட்ட மதிப்பீடு தயாரித்து வழங்கப்படும்
பொறியிலாளர்,கட்டகக்கலைஞரின் ஆலோசனைகள்
076 78 63296
உங்களது கட்டடம் கீழ்வரும்
வசதிகளுடன் நிர்மாணிக்கப்படும்
தேர்ச்சி பெற்ற பொறியிலாளர்களின் ஆலோசனைகள்
துரிதமான கட்டுமானப்பணிகள்
தரமான கட்டடப்பொருட்கள்
அனுபவமுள்ள வேலையாட்கள்
நவீன அலங்கார வேலைத்திட்டம்
info@modern-const.com
www.modern-const.com
Modern Construction & Consultant Pvt Ltd
- Batticaloa Road, Mutur, Trincomalee -


Pearl Grand
PEARL GRAND
Moments made Perfect
More Than You Expected
PEARL GRAND
Beyond your Expectations
Newly Refurbished and Expanded Pearl Grand
With state of the Art Technology
Consisting of two story function halls
Separate halls to accommodate Gents and ladies functions
With the capacity to accommodate more than 1000 guests
Celebrate with grandeur at pearl grand Make unforgettable memories with our outstanding service
A perfect venue for a destination wedding
All Covid 19 precautions are strictly in place with MOH approval
Contact now to reserve your memorable events We are always on hand to assist with your perfect occasions
077 15 444 88 | 075 23 42 343
Pearl Grand
Knox Road, Mutur


MUTUR JMI (PVT) LTD
செயற்திட்ட
முன்மொழிவு
(project proposal)
பல்துறைசார் திட்ட முன்மொழிவுகளை வரைவு செய்ய
SCAN ME
புதிய தொழில் முயற்சி
தனியார் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தல்
அரச நிலங்களை உற்பத்தி, சேவை நோக்கிற்கு பயன்படுத்தல்
அரச சார்பற்ற நிறுவனத்திற்கான (NGO) தேசிய மற்றும் சர்வதேச நிதி
சமூக சேவைகள் அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் நம்பிக்கை நிதியங்கள் போன்றவை ஆரம்பித்தல்
பல்துறைசார் திட்ட முன்மொழிவுகளை வரைவு செய்ய Mutur JMI (Pvt) Ltd
Director - Ihshan JMI
GEN IN TOUCH
+94 77 1020030
ihshanjm@gmail.com
www.mutur-jmi.com
0717891887
Mutur JMI, Trincomalee